பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

• சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 21 வியாழக்கிழமை (06.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 343

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா!
# தேர்தலில் அமோக வெற்றி!!

## முதலாவது கறுப்பினத்தவர் என வரலாற்றுச் சாதனை படைத்தார்

வாஷிங்ரன், நவம்பர் 6

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பராக் ஒபாமா மகத்தான வெற்றி பெற்றுள்ளார். அமெரிக்க வல்லரசின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற வரலாற்றுப் பெருமையை ஒபாமா பெறுகின்றார்.

நேற்றுமாலை வெளியான முடிவுகளின் படி பராக் ஒபாமா 349 தேர்தல் தொகுதி வாக்குகளைப் பெற்றுள்ள அதேவேளை ஜோன் மக்கெய்னிற்கு 147 தேர்தல் தொகுதி வாக்குகள் மட்டும் கிடைத்துள்ளன.

'மாற்றம் : எமக்குத் தேவை' என்ற தொனிப்பொருள் வாசகத்துடன் தேர்தலில் குதித்த ஒபாமா பாரிய வெற்றியடைந்திருப்பதால், அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலில், உலகின் ஒட்டுமொத்தக் கவனமும் இப்போது அமெரிக்கா மீது திரும்பியிருக்கிறது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்பின் மத்தியில் இன்று பட்ஜெட் ஜனாதிபதி சமர்ப்பித்து உரையாற்றுவார்!

கொழும்பு, நவ. 06

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றார்.

இன்று பிற்பகல் ஒருமணிக்கு வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் ஜனாதிபதி அதுமீதான உரையை மாலைவரை நிகழ்த்துவார்.

இதை ஒட்டி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கான விமான சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், நவ.6

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

இந்தச் சேவை நிறுத்தப்பட்டது தொடர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து யாழ். வருவோருக்கு விசேட முகாம் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், நவ.6

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வரும் அகதிகளை தங்கவைப்பதற்கு விசேட முகாம் ஒன்று அமைக்கப்படும்.

காங்கேசன்துறையில் யாழ். மாவட்ட இராணுத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி (18 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் இரண்டாவது கட்டமாக மக்களை மீளக் குடியேற்றுவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ.6

வலி.வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு அதன் தலைவர் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நேற்றுப் (18 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே கல்விச்சுடர்**

இன்று

★ க.பொ.த.ப. (சா) - கணிதம் - I

★ தரம் - 05 (2009) மாணவருக்கான வினாத்தாள் - I

நாளை: க.பொ.த.ப. (சா)
- தமிழ் மொழியும் இலக்கியமும்

**மட்டக்களப்பு - பதுளை வீதியில்**

## அதிரடிப்படை முகாம் மீது தாக்குதல் பத்துப் பேர் பலியானதாக புலிகள் அறிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 06

மட்டக்களப்பு, பதுளை வீதி, கோப்பாவெளிப் பகுதியில் அமைந்திருந்த விசேட அதிரடிப்படையினரின் தளம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படையணி தாக்குதலை நடத்தியது. அதில் விசேட அதிரடிப் படையைச்சேர்ந்த 10 பேர் வரை கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் அவ்வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் தமது அணியினரை இலக்கு வைத்து தாக்குவதற்கு காத்திருந்த

(18 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் கண்ணி வெடித்தாக்குதல் அப்பாவிப் பெண் படுகொலை; ஒருவர் காயம்!

கொழும்பு, நவ. 06

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் படையினர் நடத்தினர் எனக்கூறப்படும் கண்ணிவெடித்தாக்குதலில் அப்பாவிப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணியில் உள்ள குளவிசுட்டான் பகுதியில் வாகனம் ஒன்றில் பொதுமக்கள் சென்றுகொண்டிருந்த போது, அதன் மீது வண்ணாங்குளத்தில் இந்தக் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதில் பெலியமடுவைச் சேர்ந்த பூபாலசிங்கம் பாக்கியலட்சுமி (வயது - 52) என்பவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார் என்று மேலும் கூறப்பட்டது. (சி)

## கொழும்பில் நேற்று 8 தமிழர்கள் கைது

கொழும்பு, நவ. 06

கொழும்பு, புறக்கோட்டை மற்றும் கோட்டை பகுதிகளில் நேற்று அதிகாலை விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் தமிழர்கள் எட்டுப்பேர் கைது செய்யப்பட் டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதிகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்திய பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினரும் அங்கு தங்கியிருந்த இளைஞர்கள் அனைவரையும் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தினர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# டில்லிக்கு வரும் இலங்கை ஜனாதிபதியிடம் ஈழத்தமிழர்களின் உரிமை குறித்துப் பேசுக!

**மன்மோகன் சிங், சோனியாவிடம் டி.ஆர். பாலு கோரிக்கை**

புதுடில்லி, நவ. 06

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு புதுடில்லி வரும் அந்நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியாகாந்தியிடம் டி.ஆர்.பாலு கோரிக்கை விடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

'பிம்ஸ்ரெக்' எனப்படும் 7 தெற்காசிய பிராந்திய நாட்டுத்தலைவர்களின் மாநாடு எதிர்வரும் 13 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள இலங்கை [illegible] இங்கு வருகிறார். இந்த நிலையில், பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரை, மத்திய கப்பல் போக்கு வரத்து மற்றும் வீதித் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு நேற்றுமுன்தினம் தனித்தனியே சந்தித் துப்பேசினார்.

டில்லி வரும் இலங்கை ஜனாதிபதியிடம் ஈழத்தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று, வற்புறுத்த வேண்டும் என்று பிரதமர் மற்றும் சோனியா காந்தியிடம் டி.ஆர்.பாலு கோரிக்கை விடுத்தார். அத்துடன், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கக்கூடாது என்றும் கோரிக்கை விடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். (அ-சி)

## சிலாபத்தில் நிலநடுக்கம்

கொழும்பு, நவ.6

சிலாபம் பிரதேசத்தில் நேற்றுக் காலை இலேசான பூமியதிர்வு ஒன்று உணரப்பட்டது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 9.40 மணியளவில் இந்த அதிர்வு உணரப்பட்டது எனவும் இதன் காரணமாக 4 வியாபாரக் கட்டடங்களுக்கு சிறியளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு பொருத்தமான இக்ராட் (ICTAD) Grade C10 {M09,M10} ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:
06.11.2008- 17.11.2008 பி.ப.2மணி வரை

02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
18.11.2008 நண்பகல் 12 மணி வரை

03. கேள்வி திறக்கப்படும் திகதி:
18.11.2008. பி.ப.2 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.

05. மூல கேள்விப் பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு *செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம், மானிப்பாய்* என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

06. வீதி புனரமைப்பு வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதிலிருந்து ஒரு மாத காலத்துக்குள்ளும், கட்டட நிர்மாண வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதிலிருந்து இரு மாத காலத்துக்குள்ளும் நிறைவேற்றப்படவேண்டும்.

07. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 1 | நவாலி பிரசாத் சந்தை புனரமைப்பு | 6000.00 | 500.00 | 75.00 |
| 2 | ஆனைக்கோட்டை பொது நூலக கட்டட விஸ்தரிப்பு (மிகுதி வேலை) | 4700.00 | 500.00 | 75.00 |
| 3 | மானிப்பாய் பொது நூலகத் திருத்தம் | 1850.00 | 500.00 | 75.00 |
| 4 | மானிப்பாய் வடலித்தோட்டம் வீதி புனரமைப்பு (மிகுதி) | 2000.00 | 500.00 | 75.00 |
| 5 | சங்கானை வைத்தியசாலை வீதி புனரமைப்பு | 10,000.00 | 500.00 | 75.00 |
| 6 | சண்டிலிப்பாய் சோத்திப் பிடிச்சி வீதி புனரமைப்பு | 5000.00 | 500.00 | 75.00 |

வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
(சி/555212)
திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,

## கண்காட்சி

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் 'தபால் தலைகள் சேகரிக்கும் கழகத்தினால்' தபால் முத்திரைக் கண்காட்சி ஒன்று இன்று வியாழக்கிழமை முதல் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை கல்லூரியின் பிரதான பீற்றோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் வண.என்.ஜே.ஞானப் பொன்ராஜா ஆரம்பித்து வைப்பார்.

ஏனைய பாடசாலை மாணவர்கள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும், ஏனைய ஆர்வலர்கள் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையும் மேற்படி கண் கண்காட்சியைப் பார்வையிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201)


மதுரம் இன்ஸ்ரிரியூட்
(பருத்தித்துறை வீதி ,நட்டப்பிராய்)
A/L- 2009
Day Class
ஆரம்பம்:-
10.11.2008
திங்கள்- 6.am


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை, கொட்டடிப் பிள்ளையார் கோவில் ஆலய புனரமைப்புக்கு நிதி உதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலதிபருமான

**கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை எமது ஆலய பரிபாலன சபையினர் பாராட்டி நன்றி தெரிவித்து வாழ்த்துகின்றனர்.

(C/555209)
ஆலய பரிபாலன சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியைதிருமதி மதிவதனா யோகராஜா அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி சதானந்தாம்பிகை இராஜசுந்தரம்**

(ஆசிரியை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, அல்வாய்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா

(இளைப்பாறிய மருத்துவ மாது, யாழ்.போதனா வைத்தியசாலை)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புது வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்மா நேற்று (05.11.2008) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் திருமதி இரத்தினவல்லி (மன்னார்), தேவராசா (டென்மார்க்), தேவராணி (யா/வலயக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயும் அருள்வாசகம் (மன்னார்), தயாநிதி (டென்மார்க்), காலஞ்சென்ற வெஸ்லிபேனாட் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, புது வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (79662)
தகவல்:
தேவராணி (மகள்).

### திருமதி சுப்பிரமணியம் ராணி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் ராணி நேற்று (05.11. 2008) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - உமயவல்லி தம்பதியினரின் மருமகளும் சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஊழியர், இ.போ.ச.) அன்பு மனைவியும், ரேவதி, பத்மலோஜினி, லிபாகரன், மஞ்சுளா, சித்திரா, திபாகரன், சிறிதரன், குகாதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயகுமார், தவநேசன், ஜெயந்தி, முகுந்தன், சிவராஜா, அனுஷ்யா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

443/2, கண்டி வீதி;
அரியாலை, யாழ்ப்பாணம்.
தகவல்:
கனகலிங்கம் குடும்பத்தினர்.

### வயிரமுத்து இராசு

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வயிரமுத்து இராசு நேற்று (05.11.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான வயிரமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும், யோகரட்ணம் (பொறியியலாளர்), இன்பரட்ணம் (இந்தியா), கணேசரட்ணம் (கணக்காளர் - ஜேர்மன்), யோகேஸ்வரி, தவரத்தினம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரமங்கை ஸ்ரலினா (விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), ஞானரஞ்சனி, புஸ்பராணி, பிறேமதாஸ் குமாரசிறி (ஆங்கில ஆசிரியர், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி), நிறைஞ்சனா ஆகியோரின் மாமனாரும், இராசம்மா, காலஞ்சென்றவர்களான செல்லர், செல்லம்மா, துரையப்பா, அழகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29/22, உடையார் லேன்,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தகவல்:
பிறேமதாஸ் குமாரசிறி (மருமகன்).

## கண்ணீர் அஞ்சலி

AMT ரான்ஸ்போட் (இருபாலை) முகாமையாளர் நிமலன் அவர்களின் அன்புத் தந்தை

**நடராஜா ஈஸ்வரநாதன்**

அவர்களின் மறைவையிட்டு அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சிற்றி ஹாட்வெயார் & ஸ்ரோர்ஸ்,
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (79665)
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை தியாகராஜா

(தையிட்டி - தியாகு)



கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பபிடமாகவும் இராசேந்திரகுளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை தியாகராஜா (தியாகு) 04.11.2008 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் பாக்கியம் தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இரஞ்சித மலரின் அன்புக் கணவரும் சத்தியரூபி (டென்மார்க்), ஜெயந்தி, மதிவதனன் (C.T.B - வவுனியா), காலஞ்சென்ற சுபாயினி மற்றும் சுதர்சனி, சுயாழினி, யோகதாரணி, சுதாகரன் ஆகியோரின் தந்தையும் ரூபன் (டென்மார்க்), தெய்வேந்திரன், சிவா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற தில்லைநடராஜா மற்றும் பரமேஸ்வரி, தேவராஜா, பவளக்கொடி, இலங்காதேவி, இலங்கைநாயகி (லண்டன்), யோகராஜா, செல்வநாயகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவமணி, மகேஸ்வரன், நகுலாதேவி, சந்திரகாந்தி, துரைராசா, புலேந்திரன் (லண்டன்), கருணேஸ்வரி, தயாளசீலன் (கனடா), பரமேஸ்வரி, புஸ்பரட்ணம், மரியதாஸ், சபாரட்ணம், பஞ்சலிங்கம், பாலேந்திரன், ஞானரட்ணம் (இந்தியா), நவமலர், செல்வநாயகம் (செல்வா ரேடர்ஸ், கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2008) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்லை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவில் வீதி,
மாகியப்பிட்டி.
நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு. (79669)
தகவல்:
கி.பாக்கியம் (தாய்)
தி.ஜெயந்தி (மகள்).

## மரண அறிவித்தல்



### நன்னித்தம்பி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அரசாங்க நில அளவையாளர், இணுவில் கிழக்கு)

இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி பாலசுப்பிரமணியம் (தேவர்) 04.11.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி, திருமதி சிவகாமசுந்தரி (சாஸ்திர அம்மா) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பெரியதம்பி திருமதி கண்மணி ஆகியோரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், பாமினி, நளாயினி, அகிலன், சுதர்ஜன், ராகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஸ், ஜீவரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகவி, திவ்யா, ஐஸ்வர்யா, வித்யா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.11. 2008) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நண்பகல் 12 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி பி.ப 2 மணியளவில் கல்கிசை இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51-1/1 Pokuna Lane,
Off Kawdana Road,
Dehiwala.
Tel:4200374 (C/555208)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பராக் ஒபாமா வருகிறார் பராக்! மாற்றம் ஏற்படுத்த வருகிறார் பராக்!

கறுப்பு இன வம்சாவளியினரான பராக் ஒபாமாவை தமது நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் புதிய சரித்திரம் ஒன்றைப் படைத்திருக்கின்றார் கள் வெள்ளையர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அமெரிக்க மக்கள்.

ஜனநாயக அரசியல் சமுதாயத்தில் இது ஒரு புதிய மாற்றம் மட்டும் அல்ல, பராக் ஒபாமா திரும்பத் திரும்பப் பிரகடனப்படுத்திய மாதிரி புதிய உலக மாற்றத்துக்கான அமெரிக்க மக்களின் அறைகூவலாகவும் அங்கீகாரமாகவும் கூட இது அமைகின்றது.

2000 ஆம் ஆண்டில் தெரியாமலும், 2004 ஆம் ஆண்டில் தெரிந்தும் தவறிழைத்த அமெரிக்க மக்கள், அந்தக் குற்றத்துக்குப் பிராயச்சித்தம் செய்வது போல இந்தத் தடவை நடந்துகொண்டிருக்கின்றார்கள்.

2000 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தமது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், தனது ஏகாதிபத்திய - எதேச்சாதிகார - கொள்கைப் போக்கினாலும் நடவடிக்கைகளினாலும் அமெரிக்க தேசத்தை மட்டுமல்லாமல் முழு உலகையே போரியல் நெருக்குவாரத்துக்குள் ஆழ்த்தினார்.

'உலகப் பொலிஸ்காரனான' தனது வல்லாதிக்கச் செல்வாக்கை திமிர்த்தனத்தோடு சர்வதேசங்களின் மீதும் பிரயோகித்த அவர், தனது தேசத்தின் படை பல வலிமையை சர்வாதிகாரி போல உலகின் மீது ஏவி விட்டார்.

ஆப்கான் தேசம் மீது ஓர் ஆக்கிரமிப்பை ஏவிவிட்டு அந்த நாட்டின் அமைதிக்கும் சமாதான வாழ்வுக்கும் நிரந்தர சமாதி கட்டினார்.

ஐ.நாவின் அனுமதியின்றி - சர்வதேச நாடுகள் பலவற்றின் ஆட்சேபனையையும் எச்சரிக்கையையும் உதாசீனம் செய்து, புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு - தம்பாட்டில் சில நேச நாடுகளையும் சேர்த்துக்கொண்டு ஈராக் மீது பெரும் ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றை ஆரம்பித்து, அந்த நாட்டைக் கைப்பற்றி, இறுதியில் அந்தத் தேசத்தைக் குட்டிச் சுவராக்கிச் சின்னாபின்னமாக்கினார்.

'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்குத் தம்பாட்டில் ஒரு வியாக்கியானத்தை உருவாக்கிக்கொண்டு, புஷ் எடுத்த நடவடிக்கைகள் உலகில் நீதி, நியாயம், நேர்மை, தார்மீகம் போன்ற உன்னதங்களைக் குழி தோண்டிப் புதைக்கக்க லாயின.

புஷ் தலைமையிலான நிர்வாகத்தின் நியாயப் போக்கு இல்லாத அணுகுமுறை, நீதியின்பால் - உரிமை வேண்டி - தார்மீகப் பலத்தோடு - நடத்தப்பட்ட நியாயமான விடுதலைப் போராட்டங்களை எல்லாம் 'பயங்கரவாதம்' என்று பச்சை குத்தி சீரழித்ததோடு, நியாயத்துக் காகப் போராடிய சமூகங்களை எல்லாம் அநியாய சாகரத்துக்குள் நிரந்தரமாக அடக்கித் தள்ளியது.

அதேசமயம், சிறுபான்மையினரையும் நலிவுற்ற மக்கள் சமுதாயத்தையும் அடிமைப்படுத்தும் நோக்கோடு அதிகார வர்க்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கரவாதச் செயற்பாடுகளை அங்கீகரித்து, அவற்றை சட்டரீதியான செயற்பாடுகளாக அடையாளம் கண்டு தவறிழைத்தது புஷ் ஆட்சி.

ஆப்கான் மீதும், ஈராக் மீதும் போர் தொடுத்து, வரலாற்றுக் குற்றம் இழைத்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை 2004 ஆம் ஆண்டில் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்து அமெரிக்க மக்கள் திரும்பவும் மாபெரும் தவறிழைத்தார்கள்.

அந்தத் தவறுகளுக்கு பிராயச்சித்தம் செய்வது போல ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பராக் ஒபாமாவைத் தமது பெருவாரியான வாக்குகளால் இம்முறை தேர்ந்தெடுத்து நீதி செய்ய முற்பட்டிருக்கின்றார்கள் அமெரிக்க மக்கள்.

பெரும்பான்மையினரான சிங்களவர்கள் வாழ்கின்ற நாட்டில் மிகச் சிறுபான்மையினரான தமிழர்களும், ஏனையோரும் உரிமை கேட்டுப் போராட்டம் நடத்தவோ, நியாயம் கேட்டுப் பிரச்சினை பண்ணவோ கூடாது என்றும், பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கு அடங்கி வாழ வேண்டியதே அவர்களது கடமை என்பது போலவும் அடாத்தாகவும் திமிர்த்தனமாகவும் பேசுகிறார் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா.

ஆனால், அமெரிக்காவிலோ - இலங்கையில் தமிழரின் விகிதாசாரம் போன்று - சிறிய எண்ணிக்கை வீதத்தினரான கறுப்பு இனத்தவர் ஒருவரை, அந்தத் தேசத்தினது தலைமைக்கு மட்டுமல்லாமல், உலகத் தலைமையின் அதிகாரம் என்ற வலுவைக் கொண்ட பதவிக்கும் கூடத் தேர்ந்தெடுத்து ஜனநாயக விழுமியங்களுக்கு மகுடம் சூட்டியிருக்கின்றனர் அமெரிக்க மக்கள்.

பேரினவாதம் என்ற மோசமான அறியாமை இருளுக்குள் மூழ்கிக்கிடந்து, மேலாதிகாரச் செருக்கோடு, கொடுமைப்படுத்தலில் ஈடுபட்டு வரும் சிங்களப் பேரினவாதப் போக்காளருக்கு அமெரிக்க மக்களின் இந்த முன்மாதிரி ஒரு நல்ல வழிகாட்டலாக அமையட்டும்.

'மாற்றம்' ஒன்றைக் கொண்டுவரப் போகிறார் என்ற கோஷத்தோடு அதிகாரத்துக்கு வரும் பராக் ஒபாமா, நலிவுற்ற மக்களுக்கு - அடிமைப்பட்ட சமூகங்களுக்கு - அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட இனங்களுக்கு - நியாயமும் நீதியும் கிடைக்கும் வகையிலான 'மாற்றம்' சர்வதேச ரீதியில் ஏற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் அவர் ஏற்படுத்தப் போகும் மாற்றத்துக்காகப் பார்த்திருக்கிறது - காத்திருக்கிறது - சர்வதேசம்.

# யாழ். மக்களை இயற்கையும் வஞ்சிக்கிறது; நெற்செய்கையிலும் அவர்களுக்கு ஏமாற்றமே!

## கவலை வெளியிடுகின்றார் யாழ்.அரச அதிபர்

அச்சுவேலி, நவ.6

யாழ்.மாவட்ட மக்களை இயற்கையும் வஞ்சிக்கிறது. இதனால் நெற்பயிர்கள் உரிய வளர்ச்சி இல்லாமல் காய்ந்து, கருகிய நிலையில் காணப்படுகின்றன. இது பெரும் கவலையை அளிக்கின்றது. எவ்வளவு ஆர்வத்தோடு நெற்செய்கையில் ஈடுபட்டார்களோ அதே வேகத்தில் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துக்கும் சோகத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு கவலை வெளியிட்டார் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ்.

அச்சுவேலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் 'ஜிரிஇசற்' நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மா.ஞானலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நாவலம்பதி காட்டுமலை கந்த சாமி கோயில் வீதியில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அரச அதிபர் மேலும் கூறியவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணியில் 'ஜிரிசற்' நிறுவனம் காத்திரமான பங்களிப்பை ஆற்றிவருகின்றது. இதில் வீடமைப்பிற்கான உதவிகள் குறிப்பிடத்தக்க விதத்தில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவும் வீடும் திருப்தியான நிலையில் இருக்கும்போது அவர்கள் தமது குடும்பத்தின் வளமான வாழ்க்கையை மேல்நிலை பெறச் செய்யமுடியும்.

யாழ்.மாவட்ட மக்களின் காத்திரமான உழைப்பு அவர்களை விவசாயத்தில் மேல்நிலை பெறச்செய்துள்ளது. அதிலும் கடந்தவருடம் நெற்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. இந்தவருடம் அதே ஆர்வத்தோடு மக்கள் செய்கையில் ஈடுபட்டனர். ஆனால், தற்பொழுது காணப்படும் காலநிலை கவலை அளிப்பதாக அமைந்துள்ளது.

யாழ்.மாவட்ட மக்களை இயற்கையும் வஞ்சிக்கின்றது. நெற்பயிர்கள் மழையின்றி உரிய வளர்ச்சியின்றி இருப்பது கவலை அளிக்கின்றது. இதனால் நெல்விளைச்சலில் பாதிப்பு ஏற்படும்.

கடந்த வருடம் காணப்பட்ட நெல் விளைச்சல் எமக்குத் தேவையான அரிசியின் அளவில் கணிசமான பங்கை நிறைவு செய்தது. இந்த வருடம் அதே இலக்குக்குக் குறையாத அளவைப் பெறவேண்டும் - எனக்கூறினார்.

'ஜிரிசற்' நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதம ஆலோசகர் போல் லூட்ச் உரையாற்றும்போது கூறியவை வருமாறு:

யாழ்ப்பாண மக்களின் கடும் உழைப்பும் முயற்சியும் மகிழ்ச்சியைத் தருகின்றன. அதேநேரம் இங்கு காணப்படும் அவலக் காட்சிகள் கவலையைத் தருகின்றன.

பலாலியில் விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போதும், யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பிரதேசத்திற்கு எமது கடமை தொடர்பாகச் செல்லும்போதும் காணும் காட்சிகள், அழிவுகள் நெஞ்சைத்தொடுகின்றன. மக்களின் உழைப்புகளுக்கு ஏற்ப வாழ்க்கை அமையமுடியாத இந்த நிலை ஏற்பட்டிருப்பது எம்மைத் துயரத்துக்கு உள்ளாக்கியுள்ளது - எனக் கூறினார்.

வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு திறப்புகள் கையளிக்கப்பட்டன. வலி. கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உட்படப் பலர் உரையாற்றினர்.

(202-11)

# கரவெட்டியில் புலமைப் பரிசில் விழா

கரவெட்டி, நவ.6

கரவெட்டிப் பிரதேச செயலகமும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து புலமைப்பரிசில் விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இவ்விழா நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ப.அரியநாயகம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரண தரம் - 2007 பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களும் 2007 இல் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப் படவுள்ளனர்.

கரவெட்டி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றின் 2008ஆம் ஆண்டு கொடிதின சேகரிப்பு நிதியிலிருந்து புலமைப் பரிசிலும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது.

(202-70)

# பொருத்தமான இடவசதி கிடைக்காமையால் நீச்சல் தடாகம் அமைக்கும் பணி தாமதம்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதிகளைக் கொண்ட நீச்சல் தடாகம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் அதற்கான இடவசதியைப் பெற்றுக்கொள்வதிலேயே கால தாமதம் ஏற்படுகின்றது என யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாநாகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் நவீன வசதிகளைக்கொண்ட நீச்சல் தடாகம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பொருத்தமான இடத்தில் அதை அமைப்பதற்கான காணி குறித்து ஆராயப்படுகின்றது.

யாழ்ப்பாண முற்றவெளியின் மேற்காக உள்ள அரச காணிகள் இதற்காகப் பார்வையிடப்பட்டன. எனினும் அவை ஏற்கனவே காணி இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நீச்சல் தடாகங்கள் உயரமான இடத்தில் அமைக்கப்படவேண்டும் நீரை அகற்றுவதற்குப் பொருத்தமான இடமாக இருக்கவேண்டும். எனவே, நகர மத்தியில் உள்ள புல்லுக்குளம் பொருத்தமானதாக அமையவில்லை. அதை உயர்த்துவது பெரிய நிதிச் செலவை ஏற்படுத்தும்.

இந்த உத்தேச நீர்த்தடாகம் நவீன வசதிகளைக் கொண்டதாகவும் விருத்தியடைந்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளமைக்குச் சமமாகவும் இருக்க வேண்டும்,

எனவே 2 ஏக்கருக்குக் குறையாத நிலப்பரப்பு கிடைக்கும் பொழுது மாநகரசபை எல்லைக்குள் தடாகம் அமைக்கக் கூடியதாக இருக்கும் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் நீர்த்தடாகம் அமைக்கும் திட்டம் மிக நீண்ட காலத்திற்கு முன் கருக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (202-302)

## புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவர்கள்

# முன்னணிப் பாடசாலைகளில் இணைவதற்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ.6

இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் அடுத்த கல்வி யாண்டில் தரம் 6இல் முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்பதற்கு 16 தமிழ்ப் பாடசாலைகளின் விவரங்களைக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 6 பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு 145 புள்ளிகளும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு 145 புள்ளிகளும் வெட்டுப் புள்ளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

(202)

# சாவகச்சேரி நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

பல்வேறு குற்றச்செயல்களின் சான்றுப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டது பொருள்களும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தால் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் இவை விற்கப்படவுள்ளன.

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 22 | 07.11.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ.07.00 வரை |
| நட்சத்திரம் : | அவிட்டம் |
| | பி.ப.02.06 வரை |
| சுபநேரம் : | 06.05-7.35 |
| ராகுகாலம் : | 10.35-12.05 |

# அமைதியும் நம்பிக்கையும்

அனைத்துக் கல்வித்துறையிலும் பாண்டித்யம் பெறலாம். பிறருடன் வாதாடி ஜயபேரிகை கொட்டலாம். போர்க்களத்தில் மிகுந்த வீரத்துடன் போரிடலாம். எதிரிகளுடன் போராடி வென்று மீளலாம். உலகம் தரும் அனைத்துச் சுகங்களையும் பெறலாம். வானத்திலுள்ள விண்மீன்கள் அனைத்தையும் எண்ணலாம். உலகில் வாழும் உயிரினங்கள் பெயரனைத்தும் கூறலாம். எட்டுவிதக் கல்விகளில் தேர்ச்சிபெற்றுத் திகழலாம். விண்ணில் உள்ள நிலவின்மேல் இறங்கி நடக்கலாம். ஆனால் .... புலன்களை அடக்கி, மனதை நிலைப்படுத்தி, பார்வையை உள்ளே திருப்புதல் மட்டும் இயலாத காரியம்.

தற்கால உலகில் ஒவ்வொரு மனிதனும் அமைதியைப் பெறுவதற்கு ஆன்மீக வழியில் பெருமுயற்சி செய்கிறான். ஆன்மீகக் கோட்பாடுகளால் அமைதி பெற முடியாது. கடையில் சரக்காக அதை வாங்கவும் முடியாது. புத்தகங்கள் படிப்பதன் மூலமோ, உயர்ந்த பதவிகள் மூலமோ அதைப் பெறவும் இயலாது. கடவுளருளால் மட்டுமே அமைதி கிடைக்கப்பெறும். மனிதன் இப்போது அளவற்ற ஆசைகள் என்ற சுமையை தன்மேல் ஏற்றிக்கொண்டே இருக்கின்றான். இந்த ஆசைகளின் அதிகச்சுமைகள் காரணமாக அவன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து நடத்த மிகவும் சிரமப்படுகிறான். இவ்வாறு ஆசைகள் அளவுக்கு மிஞ்சிப் பெருகியிருப்பதால் அவனது சமநிலை குலைகிறது. தனது இலட்சியத்திலிருந்து வெகு தூரம் விலகிச் செல்கிறான். பைத்தியமும் பிடித்து விடுகிறது. இதன் காரணமாகவே நான் ஆசைகளுக்கு உச்சவரம்பின் அவசியத்தை வலியுறுத்திக்கூறி வருகிறேன். ஆசைகளைக் குறைத்துக்கொள்வதன் மூலம், ஓரளவு மனஅமைதி கிட்டும். உனது ஆசைகளைத் தடுத்து நிறுத்தி இறைவனது அருளைப்பெற முயற்சி செய்ய வேண்டும்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை விரும்புபவர்களே நாங்கள் உங்களை ஆதரிப்போம்!

## கன்னி உரையில் ஒபாமா!



வாஷிங்டன், நவ. 06

அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா, தான் அனைத்து அமெரிக்கர்களுக்குமான ஜனாதிபதியாக விளங்கப் போவதாகத் தெரிவித்துள்ளதுடன், நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கான கால அவகாசத்தை வழங்குமாறு கேட்டுள்ளார்.

சிக்காக்கோவின் கிராண்ட் பார்க்கில் 125,000 இற்கும் மேற்பட்ட மக்கள் முன்னிலையில் அமெரிக்க நேரப்படி செவ்வாய்க் கிழமை நள்ளிரவு உரையாற்றுகையில் ஒபாமா இதனைத் தெரிவித்தார்.

தனது மனைவி மிச்செலி, மகள்களான மலியா சகாவுடன் மேடையில் தோன்றி உரையாற்றிய ஒபாமா, தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை நாட்டின் 232 வருட கால வரலாற்றில் மிக முக்கியமான தருணம் என்றார்.

பராக் ஒபாமா ஆபிரஹாம் லிங்கன் மார்ட்டின் லூதர் கிங் போன்றவர்களின் உரையை மேற்கோள்காட்டினார்.

பாதை நீளமானது. நாங்கள் செங்குத்தாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கும். ஒரு தடவையில் நாங்கள் அங்கு செல்ல முடியாமல் போகலாம். எனினும், நான், நாங்கள் அங்கு செல்வோம் என முன்னர் எப்போதையும் விட நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கரைகளுக்கு அப்பாலிருந்து தனது உரையை அவதானித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், நாடாளுமன்றம் மற்றும் அரண்மனைகளிலிருந்தும் உலகின் மறக்கப்பட்ட பகுதிகளில் வானொலிகளில் மூழ்கியிருப்பவர்களுக்கும் எமது விதி இணைக்கப்பட்டது. அமெரிக்காவில் புதிய தலைமை உதயமாகியுள்ளது எனக் கூற விரும்புவதாக ஒபாமா கூறியுள்ளார்.

உலகைத் துண்டுதுண்டாக்க நினைப்பவர்களே உங்களை நாங்கள் தோற்கடிப்போம். சமாதானத்தையும் பாதுகாப்பையும் விரும்புபவர்களே நாங்கள் உங்களை ஆதரிப்போம் என்றும் பராக் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்காவில் கார்களோ, வீதிகளோ, விமானங்களோ இல்லாத காலத்தில் பெண்களுக்கும், கறுப்பினத்தவர்களுக்கும் வாக்கு உரிமை அற்ற காலத்தில் பிறந்த ஆன் நிக்சன் கூப்பர் என்னும் 106 வயதுப் பெண்மணி பற்றி ஒபாமா விசேடமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் இந்தத் தேர்தலில் வாக்களித்ததைச் சுட்டிக்காட்டியுள்ள ஒபாமா. அமெரிக்காவில் மாற்றம் சாத்தியம் என அந்தப் பெண்மணி நம்பினார். அதைக் கண்கூடாகப் பார்த்தார், அனுபவித்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## புஷ் வாழ்த்து

வாஷிங்டன், நவ 06

''உங்கள் பயணம் எளிமையாகவும் இலகுவாகவும் தொடர நான் உதவுவேன்'' என பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தாம் தொலைபேசி மூலமாகத் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்களை என் சார்பிலும் எனது மனைவியின் சார்பிலும் வாழ்த்துகிறேன். அத்துடன் உங்களுடன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உங்களது குடும்பத்தினரையும் ஆதரவாளர்களையும் வாழ்த்துகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கையில் நெடிய பயணம் மேற்கொண்டுள்ளீர்கள். அது எளிமையாக நடைபெற உதவுவேன் என உறுதியளிக்கிறேன்; வாழ்த்துகிறேன். மகிழ்ச்சியை சந்தோசமாகக் கொண்டாடுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், ஒபாமாவையும் அவரது குடும்பத்தினரையும் வெள்ளைமாளிகைக்கு விரைவில் வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஒபாமாவுக்கு ஹிலாரி வாழ்த்து

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி ஹிலாரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர் தேர்வில் ஒபாமாவுடன் போட்டியிட்ட ஹிலாரி பின்னர் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றார்.

ஒபாமா வெற்றி பெற்ற செய்தி கிடைத்தவுடன் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்த ஹிலாரி, ஒபாமாவின் பாட்டி மரணமடைந்ததற்கும் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார் என அவரது செய்தித் தொடர்பாளர் பிலிப் ரீனஸ் கூறியுள்ளார்.

## அமெரிக்கா முழுவதும் கோலாகலம்!



அமெரிக்க ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சிவேட்பாளர் பராக் ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமையை அமெரிக்கர் வெகு உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

சிக்காகோவில் பல்லாயிரக்கணக்கான ஒபாமாவின் ஆரதவாளர்கள் கிராண்ட் பார்க்கில் கூடி அவருக்கு ஆதரவாக கோஷங்கள் எழுப்பி வெற்றிவாகை கொண்டாடினார்கள்.

அமெரிக்க ஜனாதிபயகத்திலிருந்து கறுப்பின தலைவர் ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற தொலைக்காட்சி செய்தி வெளியானதும் ஏராளமானோர் தங்களது கைகளில் அமெரிக்கக் கொடியை ஏந்தியபடி ஆரவாரம் செய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு இரு த்டைவைகள் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய ஜெஸ்சி ஜேக்சன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

ஏராளமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து தெருக்களில் உற்சாக நடனம் ஆடி வெற்றிக்களிப்பை வெளிப்படுத்தினார்கள். அநேகர் தேவாலயங்களில் ஒபாமாவின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

ஒபாமா வெற்றி பெற்றார் என அறிவிக்கப்படுவதற்கு முன்னரே அவர் முன்னிலை வகிக்கும் செய்தி வெளியானதும் கொண்டாட்டங்கள் தொடங்கிவிட்டன.

பிலடல்பியாவில் வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் ஒபாமாவின் இந்த வெற்றி தமக்கு மிகுந்த பெருமிதத்தை அளிப்பதாகத் தெரிவித்தார்.

## கறுப்பினத்தவர்களுக்கு நம்பிக்கையூட்டி ஒபாமா வெற்றியைத் தனதாக்கினார்

### ஜோன் மக்கெய்ன் புகழாரம்

அமெரிக்கத் தேர்தலில் தங்களால் செல்வாக்குச் செலுத்த முடியாது அல்லது தாங்கள் செய்வதற்குப் பங்களிப்பு எதுவும் இல்லையென பிழையான கருத்தைக் கொண்டிருந்த மில்லியன் கணக்கான கறுப்பினத்தவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியதன் மூலம் பராக் ஒபாமா இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளதாக குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோண் மக்கெய்ன் புகழாரம் சூட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் அரிசோனாவின் பீனிக்ஸில் உரையாற்றுகையில் மக்கெய்ன் இதனைத் தெரிவித்துள்ளார். நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கு பராக் ஒபாமாகவுக்கு தன்னால் முடிந்தளவு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளதுடன் தனது ஆதரவாளர்களை ஒபாமாவிற்கு ஆதரவளிககுமாறும், வாழ்த்துக்களைத் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளார்.

நடந்து முடிந்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். குறிப்பாக இது கறுப்பினத்தவர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது எனக் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் அதன் பெயரிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய பழைய அநீதிகளிலிருந்து நீண்டதூரம் விலகி வந்துள்ளது. கறுப்பினத்தவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட இந்தத் தேர்தல் அதற்கு மிகச் சிறந்த சான்று என்றும் மக்கெய்ன் குறிப்பிட்டுள்ளார்.




## பயணிகள் பஸ்ஸில் திடீர் தீ விபத்து 20 பேர் பலி; ஜெர்மனியில் சம்பவம்

ஹெனோவர்,நவ.06

ஜெர்மனியிலுள்ள ஹெனோவர் என்னுமிடத்தில், பயணிகள் பஸ்ஸொன்றுக்குள் ஏற்பட்ட தீ விபத்தில் 20பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

பயணிகளுடன் பேர்லினை நோக்கிச் சென்று கொண்டிருந்த இப் பஸ்ஸுக்குள் திடீரென தீப்பற்றிப் பரவத் தொடங்கியது. இதில் சிக்குண்ட பயணிகளில் பெரும்பாலோனோர் வயது முதிர்ந்தவர்களாவர் என தப்பிப் பிழைத்தவர்கள் குறிப்பிட்டார்கள்.

தீப்பற்றிப் பரவத் தொடங்கியதும் 10 பேர் குதித்துத் தப்பியுள்ளனர். இவர்களில் சிலர் காயமடைந்தனர். விபத்துக்கான காரணத்தை உடனடியாக தெரிவிக்கமுடியாது. ஒருவேளை தொழில் நுட்பக் கோளாறாகவுமிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

யாரோ ஒருவர் இரகசியமாக சிகரெட் பிடித்துள்ளார். இதனால் இத் தீ விபத்தும், அனர்த்தமும் நேர்ந்துள்ளன என, இப் பஸ் நிறுவன உரிமையாளரின் தாயாரான ஒலிவர் பெல் தெரிவித்தார்.

## ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு 11பேர் உயிரிழப்பு; 18 பேர் காயம்

பக்தாத்,நவ.06

ஈராக்கின் தலைநகரான இரு வேறு இடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில், 11 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கிழக்குப் பக்தாத்திலுள்ள பஸ் தரிப்பு நிலையமொன்றுக்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்றுக் கடியில் முதல் குண்டு வெடித்தது. இதில் பெண்ணொருவர் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர் என்றும் அது விவரித்தது.

ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு பக்தாத்திலுள்ள மஸ்டால் என்னும் பகுதியில் இப் பஸ்தரிப்பு நிலையம் அமைந்துள்ளது. காயமடைந்தவர்களில் 7 பேர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என உள்ளூரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

வட பக்தாத்திலுள்ள வீதியொன்றுக் கருகில் இரண்டாவது குண்டு வெடித்தது. இதில் நால்வர் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர் என்றும் பொலிஸ் வட்டாரம் குறிப்பிட்டது.

## பிலிப்பைன்ஸில் படகு விபத்து 30 பேர் பலி; 75 பேர் மீட்பு

மணிலா, நவ.06

மத்திய பிலிப்பைன்ஸில் பயணிப் படகொன்று புயலில் சிக்கி விபத்துக்குள்ளானதில் 39 பேர் பலியாகினர். 76 பேர் மீட்கப்பட்டனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இந்தப் பயணப்படகில் நூற்றுக்கு மேற்பட்டோர் பயணித்துள்ளனர். தலைநகரான மணிலாவுக்கு தென் - கிழக்கே உள்ள மஸ்பெடி தீவுக்கப்பால் இப்படகு புயலில் சிக்கி மூழ்கியுள்ளது என்றும் அது குறிப்பிட்டது.

மஸ்பெடி தீவுக்கும் லுஜன் தீவகங்களுக்குமிடையில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பொலிஸ் அதிபர் ரூபென் சின் டெக் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இவ்விபத்தில் பலர் காணாமல் போயுள்ளனர். அதேவேளை, மரணித்தோரின் சடலங்கள் டிமா சலாங் நகருக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து 5 கிலோமீற்றர் (3 மைல்) தொலைவில் இந்நகர் அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

காணாமற்போனோரினதும் உயிரிழந்தோரினதும் உறவினர்கள் இந்நகரில் அழுது புலம்பியவாறு காத்திருக்கிறார்கள் என்றும் பொலிஸ் அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

## நோக்கியா நிறுவனத்தில் ஆள்குறைப்பு

கையடக்கத் தொலைபேசி தயாரிப்பில் முன்னணியிலுள்ள 'நோக்கியா' நிறுவனம் 600 ஊழியர்களை ஆள்குறைப்பு செய்துள்ளது. இந்நிறுவனத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றிய ஊழியர்கள் தற்போது ஆள் குறைப்பு செய்யப்பட்டுள்ளனர்.

விற்பனை மற்றும் சந்தைப் பிரிவுகளை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கையை 'நோக்கியா' மேற்கொண்டுள்ளது. இதனால் பின்லாந்து ஆலையில் மட்டும் விற்பனைப் பிரிவில் பணியாற்றிய 100 ஊழியர்கள் வீட்டுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

இது தவிர ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பிரிவில் 130 பேர் வேலையிழந்துள்ளனர். ஒட்டு மொத்தமாக இந்நிறுவனத்தின் பல்வேறு ஆலைகளில் 600 பேர் வேலையிழந்துள்ளனர் என இந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை சிவன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சூரன்போர் நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:வல்லழகனார்)

## லயன்ஸ்கழகத்தால் கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ.6

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கினர்.

கழகத்தின் மரம் நடுகைத் திட்டத்தில் வித்தியாலயத்தில் மரக்கன்றுகள் நாட்டிய பின்னர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கழகத் தலைவர் லயன் பே.சரவணமுத்து வழங்கினார். (203-207)

## பரிசளிப்பு விழா

குருநகர், நவ.6

குருநகர் 'பிறெய்ன் பவர்' கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் கல்வி நிலையத்தின் பொருளியல் ஆசிரியர் என்.பி.கஜீதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கல்வித்துறை முதல்வர் அருட்தந்தை ஏ.பி.வின்சன்ட் அடிகளார் பிரதம விருந்தினராகவும், யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் திருமதி லூ. மகேஸ்வரன், யாழ்.சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (203-51)

## பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 955 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம்

வடமராட்சி, நவ.6

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 955 மீனவக் குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்று வருகின்றனர் என பருத்தித்துறை பிரதேசத்திற்கான கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பிரிவில் 15 மீனவர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இணைந்து தற்போது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார். (203-236)

## மந்திகை பாற்சாலையில் சூடான, குளிரூட்டப்பட்ட பால்

வடமராட்சி, நவ.6

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மந்திகையில் உள்ள பாற்சாலையில் தற்போது சுடுபால், குளிரூட்டப்பட்ட பால் ஆகியன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இச்சங்கத்தினால் தற்போது அதிகளவு பால், பண்ணையாளர்களிடமிருந்தும் சுயமாக மாடு வளர்ப்போரிடமிருந்தும் பெறப்பட்டு வருகின்றது.

பால் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு பாலுணவு உற்பத்திப் பொருள்களுடன் சூடானபால், குளிரூட்டப்பட்ட பால், கொக்கோ சுவையூட்டப்பட்ட பால் என்பன பாற்சாலையில் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (203-236)

## மாதாந்த ஒன்று கூடல்

நாவற்குழி, நவ.6

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெறும் என்று மாவட்ட சமூக சேவை அலுவலர் அ.ஞானவேல் அறிவித்துள்ளார். (203-288)

# வடமராட்சியில் 18 மாதர் சங்கங்களுக்கு 140 லட்சம் ரூபா சுழற்சி முறைக் கடன்

வடமராட்சி, நவ.6

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 'நெக்டெப்' திட்டத்தின் கீழ் 140 லட்சம் ரூபா சுழற்சி முறைக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு, வல்வெட்டித்துறை வடமத்தி, வல்வெட்டித்துறை வடகிழக்கு, பொலிகண்டி கிழக்கு ஆகிய நான்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு முதற்கட்டமாக 3 லட்சம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 4 லட்சம் ரூபாவும், மூன்றாம் கட்டமாக ஒரு லட்சம் ரூபாவுமாக தலா 8 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சுப்பர்மடம் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்திற்காக முதலாம் கட்டமாக 3 லட்சம் ரூபாவும்,இரண்டாம் கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் கட்டமாக 2 லட்சம் ரூபாவுமாக மொத்தம் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கொட்டடி மாதர் கிராம அபிவிருத் திச் சங்கத்திற்கு வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்த முதலாம் கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 2 லட்சம் ரூபாவும், மூன்றாம் கட்டமாக 2 லட்சம் ரூபாவுமாக மொத்தம் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய12 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இதுவரை முதலாம் கட்டமாக 3 லட்சம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 3 லட்சம் ரூபாவும், மூன்றாம் கட்டமாக 2 லட்சம் ரூபாவுமாக தலா 8 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (203-236)

# பழச்செய்கையாளரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க குடாநாட்டில் இளைஞர்களுக்கு விசேட பயிற்சிகள்

யாழ்ப்பாணம், நவ.6

குடாநாட்டில் பழச் செய்கையாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன் சுவிஸ்நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்கும் உதவும் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 40 இளைஞர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 7 சங்கங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது.

பழமரச் செய்கையாளர்கள் இந்த இளைஞர்களின் சேவையைப் பெறுவதற்கு பொழுது சம்பந்தப்பட்ட பழமரச் செய்கையாளர் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பயிற்சி பெற்றவர்கள் பழமரச் செய்கையாளர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களது பழமரங்களைக் கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல்,செய்முறைகளை மேற்கொள்வதற்குப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, கைதடி, புத்தூர், உரும்பிராய், தொல்புரம்,உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் மாமரச் செய்கையாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு சாவகச்சேரியில் 10 இளைஞர்களுக்கும், ஏனைய இடங்களில் தலா 5 இளைஞர்களுக்கும் கடந்த மாதம் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மா, தேசி, பலா, கொய்யா என்பவற்றுடன் பூமரங்களை வளர்ப்பவர்களும் இவர்களிடம் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளமுடியும். (203-302)

# அடுத்துவரும் வாரத்தில் மழை பெய்யச் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், நவ.6

குடாநாட்டில் அடுத்துவரும் ஒரு வாரத்திற்கு மழை பெய்வதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே இருப்பதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய அதிகாரி வே.புஸ்பநேசன் தெரிவித்தார்.

கொழும்பு வானிலை அவதானத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கை முழு வதுமே 10 நாள்களுக்கு மழை பெய்யும் வாய்ப்பு இல்லை.

எனினும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்றும் கூறப்பட்டது. வங்கக் கடல் பகுதியில் தாழமுக்க நிலைகள் அவதானிக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-302)




# ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையால் 10 லட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர்த் திட்டம்

## அராலிப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது

யாழ்ப்பாணம், நவ.6

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10 லட்சம் ரூபா செலவில் அராலிப் பகுதியில் குடிதண்ணீர்த் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவற்றில் ஒரு திட்டமே குடிதண்ணீர் ஆகும்.

அராலிப் பகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அப்பகுதியில் உள்ள குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மேம்படுத்தப்படுவதுடன், பாவனையற்றுக் காணப்படும் நன்னீர் கிணறுகளையும் புனரமைக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளதாக முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்திற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மூலம் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மன்னார், அனுராதபுரம், புத்தளம் போன்ற பகுதிகளிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. (203)

## கரவெட்டிப் பிரதேச செயலக விவசாய, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கரவெட்டி, நவ.6

கரவெட்டிப் பிரதேச செயலக விவசாய குழுக்கூட்டமும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளன.

அன்று காலை 9 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் முற்பகல் 10.30 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இடம் பெறவுள்ளன என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (203-70)

## மரக்கறி விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.6

சாவகச்சேரி நகர மாதர் சங்கத்தால் சங்க அங்கத்தவர்களுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்படவுள்ளன.

வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக இவை வழங்கப்படவுள்ளன என்று சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சாவகச்சேரி மாதர் சங்கத்தில் வைத்து மரக்கறி விதைகள் வழங்கப்படவுள்ளன. (203)

## ஒளி விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள்

குருநகர், நவ.6

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு "ஒளி விழா" நிகழ்வை எதிர்வரும் டிசம்பர் மாதம் குருநகர் கலை அரங்கில் நடத்தவுள்ளது.

இந்த ஒளிவிழா நிகழ்வையொட்டி குருநகர் மக்களிடையே கல்விசார், கலை, கலாசார மற்றும் பொதுப்போட்டிகளையும் நடத்தப்படவுள்ளன. அமைப்பின் தலைவர் எம்.ஜெறோம் தெரிவித்தார்.

பேச்சுப் போட்டி, கட்டுரை எழுத்துப் போட்டி, கவிதை எழுத்துப் போட்டி, மறைக் கல்விப் போட்டி, பாலர் நடனப் போட்டி, தனி நடனப் போட்டி, குழு நடனப் போட்டி, நாட்டுக்கூத்துப் பாடல் போட்டி ஆகியவை இடம்பெறவுள்ளன. (203-51)

## வழக்கின் சான்றுப் பொருள்கள் மன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ.6

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி வழக்கு இலக்கம் ஏஆர்/194/08 வழக்கில் தொடர்புடைய சான்றுப் பொருள்களான 2 துவிச்சக்கர வண்டிகள் சுன்னாகம் பொலிசாரால் மேற்படி நீமதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி துவிச்சக்கர வண்டிகளை ஆறு மாத காலப்பகுதிக்குள் உரிமை கோரி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரிமை கோரப்படாவிடில் பகிரங்க ஏலத்தில் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (201)

## மாணவர்களிடையே போட்டிகள்

வண்ணை, நவ.6

யாழ்.மாவட்ட யேசு சபை அகதிகள் பணியகத்தால் 'உறவில் வாழ்வோம்' என்னும் பொருளில் மாலைநேரவகுப்பு மைய மாணவர்களிடையே பேச்சு, கவிதை, சித்திரம், கட்டுரை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (203-160)

## பரிசில் தினம்

யாழ்ப்பாணம், நவ.6

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகப்பீடாதிபதி க.தேவராஜா கலந்து கொள்வார். நிறுவுநர் நினைவுப் பேருரையை வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் பொ.நாகரட்ணம் வழங்குவார். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரவெட்டிப் பிரதேச செயலக சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மாவட்ட மட்ட இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் கரவெட்டிப் பிரதேச செயலகக் கணக்காளர் எஸ்.கிருபாகரன் தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற மாணவனுக்குக் கேடயம் வழங்குவதையும் முதல் இரு படங்களிலும் காணலாம்.

கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் முதியோருக்குப் பரிசில்கள் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தர்)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1034 நிலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 03 09 31 52

04-11-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400165164 - 400186025

ஜக்பொட் பரிசு ரூபா. 4,810,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 225,913 | 20/- | 4,518,260/- |
| 2 இலக்கங்கள் | 20,745 | 40/- | 829,800/- |
| 1 இல. + லக்கினம் | 20,560 | 60/- | 1,233,600/- |
| 2 இல. + லக்கினம் | 1,899 | 200/- | 379,800/- |
| 3 இலக்கங்கள் | 564 | 1000/- | 564,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,810,550/- | - |
| மொத்தம் | | | 8,595,460/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 269,736 | | 9,095,460/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,819,800/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 400165692-6-32 |
| கொழும்பு | 400185463-5-43 |
| களுத்துறை | 400176596-1-19 |
| பதுளை | 400174645-1-06 |
| கண்டி | 400179456-5-10 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



# ஆசிரியர்கள் தேவை

தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு 2 இற்கு அனைத்துப் பாடங்களிற்கும் ஆசிரியர்கள் தேவை. தரம் 6இற்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர்களும், சிங்களம் கற்பிக்கும் ஆசிரியரும் தேவை. 15.11.2008 இற்கு முன்னர் சுயவிவரக் கோவையுடன் கற்பிக்க விரும்பும் பாடத்தையும் தொலைபேசி இலக்கத்தினையும் குறித்து அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி

**மதுரம் இன்ஸ்ரிரியூட்,**

டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.


# கோழிவளர்ப்பு சாதனங்கள் வழங்கப்பட்டன

வண்ணை, நவ.6

அல்லைப்பிட்டி பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 60 குடும்பங்களுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் அவர்கள் பெரும்பயனை அடைய முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

(203-160)

## மனனப் போட்டி முடிவு

கோப்பாய், நவ.6

வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் உப பணிமனை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களிடையே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மனனப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் லிங்கன் முன்பள்ளியைச் சேர்ந்த குலேந்திரன் திஸ்தசா, குருபரன் முன்பள்ளியைச் சேர்ந்த இளங்கோ றேம்கா, லிங்கன் முன்பள்ளியைச் சேர்ந்த செல்வராசா கயலக்சி ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டனர். (203-72)

## பயிற்சிப் பட்டறை

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள ஆரம்பக் கல்வி பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் வேறு பாடத்துறை சார்ந்த தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் 3 நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் பயிற்சி நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள் [illegible]

(203-302)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

# External Degree

(Jaffna University)

* GAQ, BA -1, BA (Final)
* 1st in com, Bcom (part 1),
* Bcom (part II), Bcom (Final)

ஆகிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் - 08.11.2008

# Banking Course

CBF & DBF

Medium - Tamil & English Exam - mar 2009

புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

Further Details:
Director
Jaffna College Undergraduate Dept,
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 ★ 04 ★ 1979

இறப்பு 29 ★ 10 ★ 2006



## அமரர் செல்லத்துரை சுதர்சன்

திதி: வளர்பிறை அட்டமி (06.11.2008)

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
யாவருக்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டிரண்டு சென்றாலும்
நினைவிழக்க முடியாமல் கண்ணீர்க் கடலில் நீந்துகின்றோம்.

ஜேர்மனி. (79649) **குடும்பத்தினர்.**

# 10ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர் குமாரசாமி கேசவன்

(முன்னாள் அதிபர் - S.L.P.S - II)

கண்மகிழ 28.06.1944

கண்நெகிழ 28.10.1998

திதி: 06.11.2008

**தந்தையே தந்த தன்பே தாங்குயர் கல்வி மேன்மை**
**சிந்தையே சிறக்கு நின்றீர் சிறப்பொடு சீலந்தந்தீர்**
**வந்ததே பதவி வாழ்வு வளமுயர் நிலையில் எம்மில்**
**விந்தையே உயர்வு காட்டி விட்டுமேன் சென்றீர் அப்பா!**

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

**குடும்பத்தினர்.**

(796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்ப காலத்தில் நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டால் கருச்சிதைவுக்கு வாய்ப்புண்டு

'யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது பரவிவரும் ஆபத்துத் தரும் தொற்றுநோய், நெருப்புக்காய்ச்சல்' என்ற தலைப்பில் கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.

நோய்க்காரணிகள் கழிக்கப்படும்போது இவை நீருடன்/உணவுப் பொருள்களுடன் கலக்கின்றன. அல்லது ஒழுங்காகச் சவர்க்காரம் இட்டு கைகளை கழுவாமல் உணவு, நீர் என்பவற்றை கையாள்வது சுகதேகி ஒருவருக்கு இந்நோய் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

நோய்க்கான குணங்குறிகள்

* பற்றீரியா உடலை சென்றடைந்து 7-21 நாள்களில் குணங்குறிகள் தென்பட ஆரம்பிக்கின்றன.



* பொதுவாக விட்டுவிட்டு கடும் காய்ச்சல் ஏற்படும். ஆரம்பத்தில் சிறிதாக காய்ச்சல் ஏற்பட்டு பின்னர் படிப்படியாகக் கூடிக்கொண்டு செல்லும். 2ஆம் வாரத்தில் உயர் காய்ச்சல் ஏற்படலாம் (39 ºC- 40 ºC உடல் வெப்பநிலை).

* தலையிடி, பசியின்மை, களைப்பு, தசைமூட்டுவலி ஏற்படும்.

* சிலவேளைகளில் தொண்டைநோ, வறண்ட இருமல் ஏற்படலாம்.

* பொதுவாக மலச்சிக்கல் ஏற்படும் சிலவேளைகளில் வயிற்றோட்டம் கூட ஏற்படலாம்.

* *வயிற்றுநோ:* வயிற்றுப்பகுதியில் தொடும்போது கடுமையான வலி ஏற்படுதல். இவ்வறிகுறிகள் தென்பட்டு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்படாவிடின், உடலின் நெஞ்சு, வயிற்றுப்புறப்பகுதிகளில் சிவப்புநிறமான பொட்டுக்கள் (Rose Spot) தென்பட ஆரம்பிக்கும். இவை நோய்தொற்று ஏற்பட்டதிலிருந்து 2 வாரகாலத்திற்கு பின்பு ஏற்படும். 2-5 நாள்களுக்கு உடம்பில் தொடர்ந்து தென்படும். இப்பொட்டுக்கள் உள்ள பகுதியில் விரல்களால் அழுத்துவோமானால் அவ்விடம் வெளிறிய அல்லது வெள்ளை நிறமாக மாறும். மேலும் உடலின் பின்பகுதி, கால்கள் என்பவற்றிலும் இது ஏற்படலாம். இருப்பினும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 50% நோயாளிகளிலேயே இவ்வறிகுறி தென்படும்.

* மூக்கு வழியான இரத்தப்போக்கு ஏற்படலாம்.

* 2 வாரங்களின் பின்பு 3-5% நோயாளிகளில் குடல்வழியான இரத்தப்போக்கு ஏற்படலாம். இதனால் மலம் இரத்தம் கலந்ததாகத் தென்படும். 5 வயதுக்கு உட்பட்டவர்களிற்கு (குழந்தைகள்) வலிப்பு ஏற்படலாம்.

* மேலும் 2ஆம், 3ஆம் வாரகாலப் பகுதியில் நியூமோனியா (Pneumonia) காய்ச்சலும் உருவாக வாய்ப்புண்டு.

* ஈரல், மண்ணீரல் என்பன வீக்கமடையலாம். இதனால் வயிற்றினுள் ஒரு குழப்பம் காணப்படும்.

எனவே இவ்வாறான நோய் அறிகுறிகளில் எவையேனும் காணப்படின் உடனடியாக வைத்தியசாலை சென்று சிகிச்சையை பெற்றுக்கொள்ளுவதுடன் வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சிகிச்சை அளிக்காது விடின் பாரதூரமான பிரச்சினைகள் உருவாகும்

* குடற்புண், குடல் அரிப்பு அடைதல்.

* மூளையைப் பாதிக்கும் நோய் (Meningitis).

* என்புகளில் தொற்று (Osteomyelitis).

* இதயத்தில் தொற்று (Endocarditis).

* சிறுநீரகத்தில் தொற்று (Glomerulitis).

* பிறப்புகால்வாய், சிறுநீர்க்கால்வாய்களில் தொற்று ஏற்படும்.

* தசையில் தொற்றுவதால் சீழ் (Pus) உருவாகுதல்.

நெருப்புக்காய்ச்சலுக்கு ஒழுங்காகச் சிகிச்சை பெறவேண்டியது முக்கியமான ஒரு விடயமாகும்.

ஒழுங்காகச் சிகிச்சை அளிக்கப்படாவிடின், 30 வீதமானவர்கள் தொடர்ந்தும் நோய் உடையவர்களாக இருக்கின்றனர். 10 வீதமானவர்கள் நோயினால் இறக்கின்றனர். 5-10 வீதமானவர்கள் தொடர்ந்தும் நோய்க் காரணிகளைப் பலமாதங்களுக்கு காவக்கூடிய ஒரு காவியாக மாறுகின்றனர்.

குடல் அரிப்புக்குள்ளாவதை (Perforation) பின்வருமாறு இனம்கண்டு கொள்ளலாம். திடீரென வயிற்றுவலி ஏற்படும். இதயத்துடிப்பு வேகம் அதிகரித்தல், குருதி அமுக்கம் குறைவடைதல், மயக்கம் என்பன ஏற்படலாம். மேலும் உடலின் சுய உணர்வு இழந்துபோகும். இது மிகவும் பாரதூரமான பிரச்சினையாகும்.

குடல் வழியான இரத்தப்போக்கு அதிகரிக்குமாயின் உடலின் குருதிமட்டம் குறைந்து இறப்பு ஏற்படலாம். எனவே உடனடிச் சிகிச்சை அத்தியாவசியமாகும்.

## வைத்தியரின் ஆலோசனைப்படி மாத்திரைகளை ஒழுங்காக உரிய காலத்தில் எடுக்கவேண்டும்

நெருப்புகாய்ச்சல் கர்ப்பமாக இருக்கும்போது ஏற்படுமாயின் கருச்சிதைவு ஏற்படலாம். மேலும் ஒரு தாய் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்படுவாராயின் அவரின் சூல்வித்தகம் ஊடாகக் கர்ப்பம் தரித்த குழந்தைக்கும் பரவக்கூடும். எனவே குழந்தை பிறக்கும்போது நெருப்புக்காய்ச்சலுடன் பிறக்கலாம். இது குழந்தைக்கு இறப்பை ஏற்படுத்தலாம்.

***வைத்தியசாலைகளில் இந்த நோயானது எவ்வாறு கண்டுபிடிக்கப்படுகின்றது எனவும், எவ்வாறு நீண்டகாலக் காவிகளைக் கண்டுபிடிப்பது எனவும் ஆய்வுகூடப் பரிசோதனைகளை நோக்குவோமானால்....***

* இந்நோய்க்கான குணங்குறிகளை அடையாளம் காண்பதன் மூலமாக இந்நோயை கண்டுபிடிக்கலாம். இருப்பினும் அதனை உறுதி செய்வதற்காக ஆய்வுகூட பரிசோதனைகள் தேவைப்படுகின்றன.

* இப்பற்றீரியாக்களை ஆய்வுகூடத்தில் வளர்ப்பதன் மூலமாக இவற்றை இனம் காணலாம். பொதுவாக மலம், குருதி, சிறுநீர் என்பவற்றில் சிறிதளவு எடுத்து அதனை ஆய்வுகூட வளர்ப்பூடகங்களினுள் செலுத்தி இப்பற்றீரியாவை வளர்த்து இனம்கண்டு கொள்ளலாம். ஏனெனில் மலம், குருதி, சிறுநீர் என்பவற்றில் நேரடியாக இவற்றை இனங்கண்டுகொள்ளமுடியாது. இவற்றில் குருதி வளர்ப்பூடகம் முதலாவது வாரத்தில் சா[illegible]மான முடிவையும், மலம் 2ஆ[illegible] [illegible]லும், சிறுநீர் 3ஆம் வாரத்திலும் சாதகமான முடிவுகளையும் தரும்.

* மேலும் காவிகளாகத் தொழிற்படுபவர்களுக்கு மலத்தை எடுத்து வளர்ப்பூடகத்தில் வளர்ப்போமாயின் அவர்களை இலகுவாகக் கண்டுபிடிக்கலாம்.

* பிறபொருள் எதிரியை மையமாக வைத்து செய்யப்படும் ஒரு பரிசோதனை மூலமாகவும் இந்நோயைக் கண்டுபிடிக்கலாம் (Widal test).

நெருப்புக்காய்ச்சலின் குணங்குறிகள் வேறு சில நோய்களின் குணங்குறிகளையும் ஒத்து இருப்பதனால் கட்டாயமாக ஆய்வுகூடப் பரிசோதனை மூலமாக உறுதி செய்துகொள்ள வேண்டும்.

***எவ்வாறு இந்த நோய்க்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது என நோக்குவோம்....***

இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வைத்தியசாலையில் அனுகூலமான மாத்திரைகள் (**antibiotics**), ஒழுங்கான கவனிப்பு (**Good nursing care**), போதியளவு உணவுச்சத்து, உடலின் நீர், உப்புக்கள் சமனிலை என்பவற்றை கவனிப்பதன் மூலமாக இந்நோயினால் ஏற்படக்கூடிய இறப்புக்களை தடுக்கலாம். எவ்வாறாயினும் சிகிச்சை அளிக்கப்படுவதற்குமுன்பு நோயாளியின் இரத்தம் பரிசோதிக்கப்படவேண்டும். ஏனெனில் அவர்கள் உண்மையாகவே தொற்றுக்குள்ளாக்கப்பட்டுள்ளனரா என்பதை உறுதி செய்வதே நோக்கமாகும்.

மேலும் மாத்திரைகளை வைத்தியரின் ஆலோசனைப்படி ஒழுங்காக உரிய காலத்திற்கு எடுக்கவேண்டும். அப்போதுதான் இந்தப் பற்றீரியாக்கள் முற்றாக உடலைவிட்டு அழிவடையும். இல்லையேல் இதன் ஒரு பகுதி நிலைத்திருக்கும். இதனால் இவர் ஒரு நீண்டகாலக்காவியாக மாற வாய்ப்பு ஏற்படுகின்றது.

**வை.நிமல்ராஜ்,**
*மருத்துவபீட மாணவன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

தொடர்ச்சியான காவியாக இருக்கும் ஒருவர் **Amphicillin** அல்லது **Ciproflexacin** கட்டாயமாகப் பாவிக்கவேண்டும். மேலும் இக்காவிகளாகத் தொழிற்படுபவர்களுக்கு **Cholecystectomy** எனும் சத்திரசிகிச்சை செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

எனவே நெருப்புக்காய்ச்சலானது எமது பகுதியில் பரவுதலைத் தடுப்பதன்மூலம் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இந்நோய் [illegible]பலைக்
க[illegible]தற்கான
[illegible] வழி[illegible]

மனி[illegible]னில் இருந்து [illegible]றுக்கு இந்நோ[illegible]வுவதால் தகுந்த [illegible]ப்பழக்கங்களைக் கையா[illegible] சுத்தமான [illegible], நீர் என்பவற்றைப் [illegible]படுத்துதல். [illegible]ரதானமாக நீரினைச் சுத்[illegible] தொற்று நீக்கப்பட்டதாகவும் பய[illegible]த்துதல்.

(வளரும்)

# பொருத்தமான அரசியல் தீர்வை அரசு முன்வைக்கத் தவறின் நாடு பிளவுபடும்

## சபையில் சிவசக்தி ஆனந்தன் கர்ஜனை

கொழும்பு,நவ.6

''இந்தியாவுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து, மிகவும் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்றை இலங்கை அரசு முன்வைக்காவிட்டால், அடுத்த நாட்டின் தலையீட்டுடன் நாடு இரண்டாகப் பிரிவது நிச்சயம். நாடு பிரிவதும், தனிநாடாக இருப்பதும் அரசு முன்வைக்கும் தீர்விலேயே தங்கியுள்ளது. ''

- இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னிமாவட்ட எம்.பி. சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு தமிழர்களின் நிலங்களைப் பிடித்துக்கொண்டு வருகின்றது. நிலத்தைப் பிடிப்பதன் மூலம் அரசால் வெற்றி பெற முடியாது. தமிழர்களின் மனங்களைப் பிடித்தால் மாத்திரமே வெற்றியை எட்டமுடியும்.

அப்படி வெற்றியை எட்டுவதாக இருந்தால் தமிழர்களுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படவேண்டும்.

இன்று இடம்பெறும் யுத்தத்தால் இருதரப்பினருக்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெறும் கௌரவத்திற்காக இந்தப் போலி யுத்தத்தை அரசு தொடர்வது சரியில்லை.

அரசு யுத்தத்தை நிறுத்திவிட்டு உடன் அமைதிப் பேச்சுக்குத் தயாராகவேண்டும். இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் நிலைமை இலங்கையின் தெற்கில் உள்ளவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் தீர்வை முன்வைக்கப்போவதாக இந்தியாவிடம் இலங்கை அரசு வாக்குறுதியளித்த பிறகும் கூடப் பரந்தனில் பொதுமக்கள்மீது விமானத் தாக்குதல் நீடத்தப்பட்டுள்ளது.

எனவே, அரசியல் தீர்வை அரசு உடனடியாக முன்வைக்கவேண்டும். அது தமிழர்களுக்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும்.

அப்படி இல்லாத பட்சத்தில் அடுத்த நாட்டின் தலையீட்டுடன் நிச்சயம் நாடு இரண்டாகப் பிரியும். அதற்கேற்ற வகையில்தான் இலங்கை அரசு செயற்படுகிறது - என்றார். (சி)

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து சின்னத்திரை நடிகர்கள் உண்ணாவிரதம்

சென்னை,நவ.6

சின்னத்திரை நடிகர், நடிகைகளும் ஈழத்தமிழருக்கு ஆதரவாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலை கண்டித்து திரையுலகினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சினிமா நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் இராமேஸ்வரத்தில் பேரணி, பொதுக்கூட்டம் நடத்தினர். நடிகர் சங்கம் சார்பில் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டமும் நடந்தது.

இதையடுத்து சின்னத்திரை நடிகர், நடிகைகளும் ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் போராட்டத்தில் குதிக்கிறார்கள்.

இதுகுறித்து சின்னத்திரை நடிகர் சங்க செயலாளர் சிவன்சீனிவாசன் கூறியவை வருமாறு-

இலங்கையில் அப்பாவித் தமிழர்களை சிங்கள இராணுவம் கொன்று குவிக்கிறது. மத்திய அரசு தலையிட்டுப் போரை நிறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து, சின்னத்திரை நடிகர் சங்கம் சார்பில் சென்னையில் எதிர்வரும் 9ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும். சின்னத்திரை நடிகர் சங்கத் தலைவர் வசந்த் தலைமை தாங்குகிறார். உண்ணாவிரதத்தில் [illegible] நடிகர், நடிகைகள் அனை[illegible] கலந்து கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.- என்றார்.

# குழந்தையுட[illegible] சென்ற தமிழ்ப்பெண் கைது!

வவுனியா,நவ.6

வவுனியா, ஈரற்பெரியகுளம் சோதனைச் சாவடியூடாக சுமார் 500 கிராம் நிறையுடைய சி- 4 ரக வெடிபொருளைக் கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பெண் ஒருவர் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார், மன்னாரைச் சேர்ந்த ரவிச்சந்திரன் விஜிதா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

திங்கட்கிழமை மாலை இச் சோதனைச் சாவடி ஊடாகத் தனது ஒன்றரை வயதுக் குழந்தையுடன் சென்ற சமயமே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் -

அவரிடமிருந்து 500 கிராம் சி - 4 ரக வெடிபொருள்களையும் மற்றும் இரு டெற்றனேற்றர்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு, குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (சி)

# உலகில் அமைதிவேண்டி சாயி நிலையங்களில் பஜனை


யாழ்ப்பாணம்,நவ.6

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவவேண்டி 175 நாடுகளிலுள்ள சகல சாயி நிலையங்களிலும் ஒரே நேரத்தில் 24 மணிநேரப் பஜனை நடைபெறவுள்ளது.

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்திலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிதொடக்கம் அகண்ட பஜனை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பியேட்ரோ றிக்கோ நகரிலுள்ள விமான நிலையத்துக்கு அருகே இந்த விசித்திர மரம் காணப்படுகின்றது. தூரத்தே நின்று பார்க்கும் போது மரத்தைப் பாதுகாப்பதற்கு மதில் கட்டியது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில், இம் மரத்தின் அடிப் பகுதி அமைந்திருக்கின்றது. இங்கு வரும் உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவரும் இம் மரம், உதயன் வாசகர்களையும் கவருமென்பதில் சந்தேகமில்லை.




(நன்றி: நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் அதன் சுற்றுப்பிராந்தியத்திலுள்ள வேறு சில கோயில்களிலும் நிகழும் சூரன்போரில் பங்குபற்றுவதற்காக வேடம் கட்டியுள்ள 'வீரவாகுதேவர் படையணியை'ச் சேர்ந்த ஒருவரைப் படத்தில் காணலாம். கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த மேற்படி வேடம் கட்டும் கலைஞர் குழுவினர், தமக்கான ஐதீகங்கள், பாரம்பரியமான சடங்கு சம்பிரதாயங்கள், வேடவுடைப் புனைவுகள், யாத்திரைகள் என்பவற்றை உடையவர்கள். காட்சி ரீதியாக தலங்களை நோக்கிய இவர்களது யாத்திரையும், வேடவுடையின் பெருங்காட்சிக் கோலமும் யாழ்ப்பாணக் காட்சிப் பண்பாட்டில் முக்கிய மானவை. இவர்களது மேற்படி ஆடையும், முல்லைத் தீவுப் பிராந்திய 'கோவலன் கூத்து' வேடவுடையும் பெருமளவுக்கு ஒத்துள்ளமையையும் அதானிக்க முடிகிறது.

(தகவல்: பாலஸ்[illegible])

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



வித்தியாசமான கட்டடங்களை வடிவமைப்பது டுபாய்க்காரர்களுக்குக் கைவந்த கலை! உலகின் வினோதமானதும், விசித்திரமானதுமான பல கட்டடங்களை டுபாய் நாட்டில் காண முடியும். அவ்வாறு பார்ப்போரை எல்லாம் மூக்கின் மேல் விரலை வைத்து, ஆச்சரியத்தில் ஆழ்த்தும் டுபாய் நாட்டிலுள்ள படி வரிசைக் கட்டடமே இது.



பல வருடங்களுக்கு முன் நம் முன்னோர்கள் பிரயாணம் செய்பவர்களின் நன்மை கருதி, சுண்ணாம்புக் கலவைகொண்டு ஆங்காங்கே 'மைல்கல்களை', நிறுவினார்கள். இந்த மைல் கல்களைக்கொண்டு பிறரின் உதவியின்றி நாம் செல்லவேண்டிய இடத்தை அடையமுடியும். சிமெந்தின் வருகையோடு சுண்ணாம்பிலான மைல்கல்கள் வழக்கொழியத் தொடங்கின. எனினும் சில இடங்களில் இன்றும் அதே தோற்றத்துடன் உள்ளன. படத்தில் நீங்கள் பார்க்கும் மைல்கல், புத்தூர் - சுன்னாகம் வீதியில் கொத்தியாலடி மயானத்திற்கு அண்மையில் உள்ள வீதியோரத்தில் உருக்குலையாமல் கம்பீரமாக நிற்கிறது.

(படமும் தகவலும்: கலைஞன்)



யாழ்ப்பாணத்தையும் தென்னிலங்கையையும் தொடர்பு படுத்துவதில் முதனிலை வகித்த ஒரு பிரதான இடமே இது. யாழ்ப்பாண மக்களினதும், தென்னிலங்கை மக்களினதும் தொடர்புகளைப் பலப்படுத்திய போக்குவரத்து மையமாக விளங்கிய, யாழ்.புகையிரத நிலையத்தின் தற்போதைய தோற்றமே இது. இருபது வருடங்களுக்கு முன்பு பல்லாயிரக் கணக்கான மக்கள் நிறைந்த இடமாகக் காட்சியளித்தது. ஆனால் இன்று, முன்பு இப்படி இருந்தது என்ற வரலாறு மட்டுமே மீதமாக, வெறிச்சோடிக்கிடக்கின்றது. யாழ்ப்பாணத்திற்குப் பெருமை சேர்த்த ஒரு பங்காளி, நோயாளி போல் காட்சி தருவதைப் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்: கலைஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளேடியேட்டர் சண்டை





ஆதிகால ரோமாபுரியில் இடம்பெற்று வந்த ஒருவித வாள் சண்டையானது வரலாற்றில் இடம்பெற்றுள்ள மிகக் குரூரமான, மிருகத்தனமான விளையாட்டு என வர்ணிக்கப்படுகின்றது. இதனை கிளேடியேட்டர்களின் மோதல் (Fight of the gladiators) என்று அழைப்பார்கள். இரூஸ்கன் என்றழைக்கப்படும் பழங்குடி மக்கள் மத்தியில் நிலவியதாகக் கருதப்படும் ஒருவித சண்டையைத் தழுவியே இந்த கிளேடியேட்ட மோதல் உருவானதாகக் கூறப்படுகின்றது. ஒருபெரிய மரணச்சடங்கு நடைபெறவிருக்கும்போது அடிமைகளை ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டையிட வைப்பது இவர்களின் வழக்கமாக இருந்ததாம். கிறிஸ்துவுக்கு முன் 264 ஆம் ஆண்டளவில் ரோமானியர்கள் இந்தச் சண்டை முறையைக் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஆரம்பத்தில் மரணச்சடங்குகளின்போது மட்டுமே கடைப்பிடிக்கப்பட்ட இது பின்னர் ரோமானிய மக்களின் பொதுப் பொழுதுபோக்காகப் பரிணமித்தது. விஸ்தாரமான இடங்களில் இச்சண்டைகள் நடத்தப்படலாயின. ஆரம்ப காலத்தில் இவ்வாறு போராடுவதற்கு அடிமைகளும், தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளும் மட்டுமே பயன்படுத்தப்பட்டனர். பிற்காலத்தில் இவ்வாறான போராளிகளைப் பழக்குவதற்குப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் புகழ் பெறுவதற்கும் பணம் சம்பாதிப்பதற்கும் பல விதமான மக்களும் இதில் ஈடுபடலானார்கள். இம்மாதிரி விளையாட்டுகளை நடத்துவதற்கென்று பெரிய பார்வையாளர் கூடங்களும் அமைக்கப்படலாயின. இந்த மோதல் போட்டிகள் முதலில் மரத்தினாலான ஆயுதங்களைக் கொண்டே நடைபெறும். பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக இவ்வாறு செய்யப்பட்டது. இதற்கு முன்னர் போராளிகள் பொன்னால், வெள்ளியினால் ஆன உடைகளை அணிந்துகொண்டு ஊர்வலமாக வருவார்கள். ஊர்வலம் முடிந்ததும் போர் ஆரம்பமாகும். குழல்கள் ஊதப்படும். போராளிகள் தமது போலி ஆயுதங்களை அப்பால் எறிந்துவிட்டு உண்மையான ஆயுதங்களைக் கைகளில் எடுத்துக் கொள்வார்கள். இருவர் இருவராகப் பிரிந்து குரூரமான மோதல் ஆரம்பமாகும். பல்வேறு விதமான ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள். இருவர் இருவராகவே சண்டை செய்தார்கள். ஒருவர் காயமுற்று வீழ்ந்தால் அவருடைய விதியைப் பார்வையாளர்களே தீர்மானிப்பார்கள். அவர்கள் தமது கைக்குட்டைகளை உயர்த்தி விசுக்கினால் போராளி உயிர்வாழலாம் என்று அர்த்தமாகும். கைகளைத் தாழப் பதித்தால் அவர் கொலை செய்யப்பட்டுவிடுவார். காலப்போக்கில் ரோமானியர்களுக்கு இம்மாதிரி விளையாட்டில் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் புதிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தினார்கள். போராளிகள் சிங்கங்கள், புலிகள் மற்றும் காட்டுமிருகங்களோடு போராடுவதைக் காணவிரும்பி அவ்வாறான போட்டி விளையாட்டுக்களை ஏற்படுத்தினார்கள். இம்மாதிரி இரத்த வெறிபிடித்த விளையாட்டுக்களை நிறுத்திவிடப் பலர் முயற்சி செய்தனர்; முடியவில்லை. கி.பி 500 களில்தான் தியடோரிக் சக்கரவர்த்தி இந்தக் குரூர விளையாட்டை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.

ரம்யன்

# இதயம் இன்றி 16 நாள்கள்



**'உன் இதயம் எங்கே?'** என தாங்வானைச் சேர்ந்த செ சி சங்கிடம் ஒரு தடவை கேட்டிருந்தால் 'கழற்றி வைச்சிருக்கேன்' என்று கூறியிருப்பார்.

ஏன் தெரியுமா?

இதய நோயாளியான இவர் 16 நாள்கள் இதயம் இல்லாமல் உயிர்வாழ்ந்திருக்கின்றார். அந்த 16 நாள்களும் இதயத்தைக்கழற்றி வெளியில் வைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறு இதயம் இல்லாமல் இத்தனை நாள்கள் ஒருவர் உயிர்வாழ்ந்தமை உலகில் இதுவே முதல் தடவை.

60 வயதான இவர் இதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு பரிசோதனை செய்ததில் அவரது இதயம் முழுவதும் பக்றீரியா தாக்கிச் சிதைந்திருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவரது இதயத்தை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இயற்கை இதயமோ, செயற்கை இதயமோ இல்லாமல் *Extracorporeal Membrane Oxygenation* என்னும் இயந்திரத்தின் உதவியுடன் 16 நாள்கள் உயிருடன் வாழ்ந்திருக்கிறார். அதன் பின்னரே வேறு ஓர் இதயம் கிடைத்து அவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது. தாங்வான் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

பி.சபோ, கொக்குவில்.

# புதன் பொய்கை



## தேடல்

துயரத்தின்
வடுக்களால்
நிறைந்த
எங்கள்
மனக்குவளைக்குள்
நிம்மதியின்
துளியேனும்
இடுவோம்
என்ற
நம்பிக்கையில்
சாமிகளை
தேடி.......
சந்நிதானம்
சென்றோம்
அவைகளும்.......
அதைத் தேடித்தானாம்....
புறப்பட்டு விட்டன

எஸ்.கவிதரன்,
சண்டிலிப்பாய்.

## தடுமாற்றம்

எழுதுவதற்கு
எழுதுகோல் - எடுத்தேன்
எதையெழுத.....
மாறி வரும் உலகை(ப்)
பற்றி எழுதவா
மனித மில்லா மனிதரை(ப்)
பற்றி எழுதவா
மன மகிழ்ச்சியில்லா
வாழ்வை(ப்)
பற்றி எழுதவா
எதை எழுத.........

மகே-மேனன்,
கொற்றாவத்தை

# இது தான் பீனிக்ஸா?



அற்புதமான எலி ஒன்றை அமெரிக்க அறிவியல் அறிஞர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த எலி மறுபிறவி எடுக்கக் கூடியது. ஆம், இந்த எலியின் வாலை நறுக்கினால் வால் மீண்டும் வளர்கின்றது. காலை வெட்டினால் அது மூட்டுக்களோடு சேர்ந்து மீண்டும் வளர்கின்றது. இதயத்தை இயக்க விடாமல் உறையவைத்தால் மீண்டும் துடிக்கத் தொடங்குகின்றது.

இத்தகைய அற்புத எலியின் மறு அவதாரம் எடுக்காத ஒரே உடல் உறுப்பு அதன் மூளைதானாம்.

அமெரிக்காவின் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் உள்ள விஸ்ட்டர் ஆய்வுக் கழகத்தின் பேராசிரியர் எல்லென் ஹீபர் காட்ஸ் அம்மையார் தமது இந்த ஆராய்ச்சி பற்றிக் கூறுகையில், ஒருநாள் மனிதனுக்கு இந்த உடல் உறுப்பு மறு அவதாரம் எடுக்கும் ஆற்றலை வழங்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது - என்றார். இந்த நம்பிக்கைக்கு என்ன ஆதாரம்? பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எலியின் கருவில் உள்ள ஈரல் செல்களை, சாதாரண எலியின் உடம்புக்குள் ஊசி மூலம் செலுத்தினால் அந்தச் சாதாரண எலிக்கும் உடல் உறுப்பு மீண்டும் வளரும் ஆற்றல் கிடைத்துவிடுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ஆராய்ச்சி இன்னும் முழுமை பெறவில்லை.

எலியின் இதயம், கால்கள், வால், காதுகள் போன்ற உடல் உறுப்புகளைத் துண்டித்தோ, சேதப்படுத்தியோ பார்த்தோம். அவை மீண்டும் வளர்ந்தன.

அதன் கரு செல்களை ஊசி மூலம் இன்னொரு எலியின் உடம்பில் செலுத்தினால் அதனுடைய மீண்டும் வளரும் ஆற்றல் ஆறு மாதங்களுக்கு மேலும் நீடித்தது. பரிசோதனைக்கு வரும் எலியின் காதில் அடையாளத்திற்காகப் போடப்படும் சிறு துளைகள்கூட இல்லாமல் ஆறிவிட்டதாம். இதற்கு என்ன காரணம்? பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட, குணமாகும் திறன் பெற்ற எலி 'எம் ஆர் எல்' என்ற மரவுவழியில் வந்தது.

அதனுடைய செல்கள் வேகமாக மடிந்து வேகமாகத் திரும்ப வளரக்கூடியது. இதனால்தான் மீண்டும் வளரும் திறன் கிடைக்கின்றது என்று சொல்லலாம். ஒரு எலியின் ஆயுள் இரண்டு ஆண்டுகள். இப்போது பரிசோதிக்கப்பட்ட எலிக்கு 18 மாதம்தான் ஆகிறது. இது இரண்டு ஆண்டுகள் மேலும் உயிர் வாழுமானால் இதே மரபணுக்களான ஜீன்கள் நீடித்த ஆயுளைத் தரக்கூடும். அதன் மூலம் மனிதர்களுக்கு மரணபயம் இல்லாமல் போகும் அல்லவா என்றும் கூறியுள்ளார்.

சாம்பலில் இருந்து உயிர்பெறும் பீனிக்ஸ் பறவை பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் நேரில் பார்த்ததில்லை. அதை உண்மையாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பீனிக்ஸாய் இந்த எலி உயிர் பெறுமோ?

கோகுலன், கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளில்...

**7 ஆம் ஆண்டு** **8 ஆம் ஆண்டு**





அமரர் **முருகேசு கணபதிப்பிள்ளை**

தோற்றம் 13.07.1909 மறைவு 11.11.2001

திதி: 24.10.2008

திருமதி **சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை**

தோற்றம் 11.10.1917 மறைவு 04.11.2000

திதி: 06.11.2008


வாழ்விலே எமக்காக யாவையும் அர்ப்பணித்து
வாழ்வாங்கு வாழவைத்த வானுறையும் தெய்வங்களே!
வாழ்வில் எமக்கு மட்டுமல்ல எம் சந்ததிக்கும்
வழிகாட்டும் கலங்கரை விளக்குகள் நீவிர் அன்றோ.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

கனையன்தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/555200)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **பொன்னையா குணசேகரம் (பாஸ்கர்)**

(வர்த்தகர்)

சந்ததியாக: 25.07.1965 சரித்திரமாக: 23.09.2008

06.11.2008


உள்ளத்தை கொள்ளை கொள்ளும் உத்தம அழகுடையோனே!
கள்ளச் சிரிப்பாலே கருமங்களை முடித்திடுவாயே!
மாவிடனாய் பிறந்ததன் மகிமையினை தானுணர்ந்து
ஊனினை உருக்கி எமக்காய் உழைத்து வந்து
கடமைக்காய் காலத்தை கண்ணியமாய் நடத்தி
திடமான இடமொன்றை தடம் பதித்தே வைத்திருந்தா
உப்பிட்டாள் உத்தரியை உயிருக்குயிராய் நேசித்து
தப்பில்லாப் பிள்ளைகளை தகைமையுடன் வாழவைத்து
செப்பரிய பணிகளை செவ்வனுறச் செய்த
ஒப்பரிய தெய்வமே! எமை விட்டு மறைந்ததேனோ?

உங்கள் பிரிவால் துடிக்கும்:
மனைவி: கு.நகுலேஸ்வரி,
பிள்ளைகள்: டசிந்தா, டசீபன், டருஷன்,
லஜந்தா, துவாரதா.

"செல்லமகால்",
நாவற்குழி வடக்கு, செல்வநகர்.
தொ.பே.: 0602217179.

(79623)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

**முத்துக்குமார் புவனேஸ்வரியம்மா**

தோற்றம் 23.03.1940 மறைவு 07.10.2008

கருவறையில் இடம் தந்து பத்து மாதம் சுமந்து
உயிருடன் உருவம் தந்து உதிரத்தைப் பாலாக்கி
உலகையுடன் ஈந்து உருவாக்கிய அம்மாவே!
அன்பால் எமைக் காத்து பாசமாய் வளர்த்தெடுத்து
பண்புடன் வாழ ஆளாக்கிய தெய்வமே!
இதயத்தில் அணையாத தீபமாய் எரியும்
எம் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.11.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகோவளம், பருத்தித்துறை. (79645) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர் :- சிவபாதசுந்தரம்பிள்ளை நவநீதன், கண்டி / இராஜவலை
இந்து தேசிய கல்லூரி

# Special Guidance for O/L 2008 Students


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December


**T / 32 / I** **கணிதம் - I** **Two hours**

## பகுதி - A


01. 10% வட்டி அறவிடப்படும் வங்கி ஒன்றில் ரூபா 100 ஐக் கடனாகப்பெற்றால் வருட முடிவில் செலுத்தவேண்டிய பணம் எவ்வளவு?
02. 0.8cm ஐ மில்லிமீற்றரில் தருக.
03. a - b இன் ஒரு காரணி $(\sqrt{a} + \sqrt{b})$ எனின், மற்றைய காரணியை எழுதுக.
04. 14cm விட்டமுடைய வட்டமொன்றின் பரிதி 44cm எனின்; அதே ஆரையுடைய அரை வட்டத் தட்டின் சுற்றளவு யாது?





05. x /7 என்ற பின்னம் "மீளும் தசமம் அல்ல" எனின், து இற்குச் சாத்தியமான பெறுமானம் ஒன்று தருக.
06. O வட்டமையம் எனின், மிகப்பெரிய நாணைப் பெயரிடுக.





07. T.2534 ÷ 2 ஐச் சுருக்குக.
08. y = 2x - 3 இற்குச் சமாந்தரமாக உற்பத்தியினூடு செல்லும் நேர்கோட்டின் படித்திறன் யாது?
09. x இன் பெறுமானம் காண்க.





10. A = {இரண்டு பக்கங்களையுடைய பல்கோணி} என்ற தொடையின் முதலிமை யாது?
11. A, B சாரா நிகழ்ச்சிகளாக P (AnB) = 1/6, P (A) = 1/3 எனின், P (B) யாது?
12. $\begin{pmatrix} 2 & 0 \\ 0 & 1 \\ 5 & 3 \end{pmatrix}$ என்ற தாயத்தின் வரிசையை தருக.
13. 4 இற்கும் 1/4 இற்கும் இடையில் பெருக்கலிடை ஒன்றைப் பெறுக.
14. Sin q = 3/2 எனின், இணின் ணு காண்க.
15. உருவில் x இன் பெறுமானத்தைக் காண்க.





16. x - 3y = 2, x + 3y = 8 எனின், y இன் பெறுமானம் யாது?
17. 13cm ஆரையுடைய வட்டம் ஒன்றின் மையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் 24cm நீளமான நாண் அமைந்திருக்கும்?
18. $(AnBnC)^1$ பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.




19. $y = (n+1)^2 - 2$ என்ற சார்பை y அச்சின் நேர்த்திசை வழியே இரு அலகுகள் மேல்நோக்கி நகர்த்தினால் புதிய சார்பின்,
    1) சமன்பாடு யாது?
    2) இழிவு பெறுமானம் யாது?
20. 3 மனிதர்கள் நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் வீதம் ஒரு வாரத்தில் செய்துமுடிக்கும் வேலையை அதே காலப்பகுதியில் நாளொன்றுக்கு 6 மணித்தியாலப்படி செய்து முடிக்க மேலதிகமாக எத்தனை பேர் தேவை?
21. O வட்டமையம் எனின்,
    1) x:y இற்கிடையிலான விகிதத்தை எழுதுக.
    2) y, z இற்கிடையிலான தொடர்பைத் தருக.




22. $x^2 - 4, 2-x, 5$ இன் பொ. ம. சி காண்க.
23. வாகனமொன்றை இறக்குமதி செய்யும்போது 25% தீர்வை செலுத்தப்படவேண்டும். ரூபா 500,000 பெறுமதியான வாகனத்தைக் கொள்வனவு செய்யும்போது செலுத்தப்படும் தீர்வை வாகன பெறுமதியின் என்ன சதவீதமாகும்?
24. 1:75000 என்ற அளவிடைக்கு வரையப்பட்ட அளவிடைப்படத்தில் 4cm இடைத்தூரத்தில் உள்ள இரு நகரங்களுக்கிடையிலான உண்மைத்தூரத்தை ட் இல் தருக.
25. 3 - 2 x ι 1என்ற சமனிலியின் தீர்வுகளை எண்கோட்டில் வரைபுபடுத்துக.
26. $\log_3 x = -1$ இல் x ஐ எழுவாயாக்கி பெறுமானம் காண்க.
27. A யிலிருந்து ஆயின் திசைகோள் $310^0$ எனின், B யிலிருந்து A யின் திசைகோள் யாது?
28. உருவிலுள்ள தரவுகளை அவதானித்து x ஐ a, b சார்பில் பெறுக.





29. ரூபா 10 பெறுமதியான பங்குகளை சமத்திலும் 3 ரூபா அதிகமான விலையில் வாங்குவதற்கு ரூபா 6,500 ஐ முதலிட்டால், பங்குகளின் பெயரளவிலான பெறுமானம் காண்க.
30. 70kg நிறையுடைய 7 மாணவர்களைக் கொண்ட குழுவொன்றிலிருந்து 49kg, 41kg நிறையுடைய இருவர் வெளியேறினால் குழுவின் புதிய இடை நிறை யாது?

## பகுதி - B

**சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.**


01. a) ரவி, ரகு ஆகிய இருவரும் முறையே ரூபா 80000, ரூபா 100000 ஐ முதலிட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கின்றனர். வருடமுடிவில் 36000 ரூபா இலாபமாகக் கிடைத்தால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் இலாபத்தைத் தனித்தனியே காண்க.
    b) ரவி வியாபாரத்தை ஆரம்பித்து 3 மாதங்களுக்குப் பிறகு ரகு வியாபாரத்தில் இணைந்திருந்தால் அவர்களிடையே இலாபம் பகிரப்படவேண்டிய விகிதம் மாற்றமடையுமா? ஏன்? அவ்விகிதத்தைக் காண்க.
02. a) வென்வரிப்படத்தை அவதானித்து பின்வருவனவற்றைக் காண்க.
    1) n (A∩B∩C)
    2) n (A∩B)
    3) $n[(A\cap B)^1 \cap C)]$
    4) $n(A\cup B\cup C)^1$




    b) உருவில் மூட்டற்ற தொடைகளைப் பெயரிடுக.
    c) கிறிக்கட் போட்டி ஒன்று நடைபெறுவதற்கான நிகழ்தகவு 3/5. அணியொன்று வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவு 1/4 எனின், போட்டியில் பங்கேற்கும் அணி வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவைக் காண்க.
03. தண்டு, இலை வரைபில் 15பேரின் உயரங்கள் ஞீட் இல் தரப்பட்டுள்ளன.

| தண்டு | இலை |
|---|---|
| 11 | 0, 7 |
| 12 | 5, 5, 5, 9 |
| 13 | 4, 8, 8, 8, 9 |
| 14 | 3, 4 |
| 15 | 0, 9 |

    1) பரம்பலின் வீச்சு யாது?
    2) ஆகாரம் காண்க.
    3) இது எவ்வகையான பரம்பலாகும்.
    4) இவ் ஈட்டுகள் பின்னக மாறிகளா? தொடர் மாறிகளா?
    5) காலணை இடைவீச்சு காண்க.
    6) குள்ளமானவரின் உயரத்தை ட் இல் தருக.
04.




    1) செவ்வகத்தகட்டின் சுற்றளவு யாது?
    2) பரப்பளவு யாது?
    3) இச்செவ்வகத்தகடு 10cm உயரமுடைய உருளையாக வளைக்கப்பட்டால் உருளையின் ஆரையைக் காண்க.
    4) இவ்வுருளையின் குறுக்கு வெட்டுமுகப் பரப்பளவு யாது?
    5) உருளையின் கொள்ளளவு யாது?
05. ராதாவிடம்
    a) ரூபா 80,000 ஐ 12% கூட்டுவட்டிப்படி கடனாகப்பெற்றார் கமல். இருவருட முடிவில் கடனிலிருந்து விடுபட கமல் செலுத்த வேண்டிய தொகையைக் காண்க.
    b) இதே தொகையை குறித்த வட்டி வீதப்படி எளிய வட்டிக்கு கடனாகப்பெற்றால் 2 வருட முடிவில் செலுத்த வேண்டிய தொகையைக் காண்க.
    c) இக்கொடுக்கல் வாங்கலில் ராதாவுக்கு எளிய வட்டியா, கூட்டு வட்டியா இலாபகரமானது?

பகுதி II மாதிரி வினாத்தாள் எதிர்வரும்
வியாழக்கிழமை வெளிவரும்

## கடந்த 09.10.08 இல் வெளிவந்த வினாத்தாளுக்கான விடைக்குறிப்புகள்

### கணிதம் - 1இ பகுதி - A

| | | |
|---|---|---|
| 01) 23. 7 | 02) 6 | 03) 8/100 = 0.08 |
| 04) 2 \| 3, 7, 8<br>3 \| 0, 1, 4 இடையம் 30<br>4 \| 2 | 05) y + y + 2 = 2y + 2 = 2 (y+1) | 06) $3\sqrt{5}$ |
| | 07) 0. 280kg | 08) x = 3 x 12 ⁶ =18 |
| 09) a (3b + 5) | 10) (24/3) cm = 8 cm | 11) 7a |
| 12) 4xy | 13) பக்கம் AB | 14) $(5)^2$ $(3)^2$ = 25 9 = 16 |
| 15) $100100_{இரண்டு}$ | 16) $y_1$ $y_2$ / $x_1$ $x_2$ = m<br>3 - 0/-2 0 = m, y = (3/2) x | 17)[(p+8)-(p-8)][(p+8)+(p-8)]<br>= p + 8 -p + 8 + p + 8 + p - 8<br>= 16 x 2p = 32p |
| 18) (45/60) x 100% = 75% | 19) (7/3) ÷ (7/2) = (2/3) | 20) 60/(2/5) x (1/3) = 50 |
| 21) 1) m = 2,<br>2) c = 5 | 22) $x^4 z^2$ | 23) $\sqrt{12} = \sqrt{4} \times \sqrt{3}$<br>= 2 x 1. 732 = 3.464 |
| 24) 3 x 3 | 25) QOR = $110^0$<br>RSQ = QOR / 2 = $55^0$ | 26) $2^{x+1} = 2^3$<br>x + 1 = 3, x = 2 |
| 27) (2x+9+6x+10+7)/5 = 10<br>8x+26 = 50, 8x = 24, x = 3 | 28) $[1/(3+1)]^{-2} = (1/4)^{-2} = (1/2)^{-4} = 2^4$ | 29) Tn = a+(n-1) d<br>83 = 3+ (n-1)4, n = 21 |
| 30) (95/100) x 600 = 570 | | |

**அன்புக்குரிய ஆசிரியர்களே,**
நீங்களும் சுயமாக வினாத்தாள்கள் தயாரிக்கும் ஆற்றல் உடையவர்களாக இருந்தால் உங்களையும் எமது கல்விச்சுடர் அரவணைத்து அதன் தரம் அறிந்து பிரசுரம்செய்து உங்கள் வினாத்தாள்கள் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து பகுதி மாணவர்களையும் (உதயன் - சுடர்ஒளி) மூலம் பயன்பெற செய்வதற்கு கல்விச்சுடர் தயாராக உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வினாத்தாளையும் விடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி: கல்விச்சுடர் உதயன் பத்திரிகை,
362, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு :-
மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.
தொலைபேசி : 0212229933 / 0716850005 / 0714273035
தொலைநகல் : 0212229944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தரம் 05 மாணவர்களுக்கான**

# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009


**வினாத்தாள் 1** **நேரம் : 45 நிமிடங்கள்**

**முதலாம், இரண்டாம் வினாக்களிற்கு தரப்பட்டுள்ள நான்கு உருக்களில் வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.**

01. 1) 2) 3) 4)




02. 1) 2) 3) 4)



03. நாம் சுத்தமாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் கூற்றின் கீழ்க் கோடிடுக.
1) கந்தையானாலும் கசக்கிக்கட்டு.
2) இரக்கப்போனாலும் சிறக்கப்போ.
3) சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
4) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

04. பாலனின் நடத்தைகளை அவதானித்த அவனது வகுப்பாசிரியர் அவனது தாயாரிடம் ''பாலன் எதிர்காலத்தில் சிறந்த ஒழுக்கமுடையவனாக வாழ்ந்து கல்வித்துறையில் பெரும் பதவியில் இருப்பான்'' என்று கூறினார். இச்சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழி,
1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.
3) வளரும் பயிரை முளையில் தெரியும்.
4) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

05. பிழையான தராசின் கீழ்க் கோடிடுக.





06. 8cm நீளமும் 6cm அகலமும் கொண்ட வெள்ளித்தகட்டின் விலை ரூபா 480 ஆகும். அதன் பாதி நீளம் பாதி அகலம் கொண்ட வெள்ளித்தகட்டின் விலை யாது?
1) ரூபா 240 2) ரூபா 120 3) ரூபா 100 4) ரூபா 360

07. விளையாட்டு ஒன்றிற்காகக் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களிற்கு A,B,C என ஆங்கில எழுத்துக்கள் தனித்தனியே எழுதப்பட்ட அட்டைகள் கையில் கொடுக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் சம இடைவெளியில் அவ் அட்டைகளைத்தாங்கிய வண்ணம் வட்டமாக நின்றனர். A என்ற மாணவனுக்கு நேர் எதிரே E என்ற மாணவன் நின்றான். எனின், C என்ற மாணவனுக்கு எதிரே உள்ள மாணவன் யார்?
1) D 2) F 3) G 4) H

08. வட்டமாகநின்ற மாணவர்கள் எத்தனைபேர்?
1) 4 பேர். 2) 6 பேர். 3) 8 பேர். 4) 10 பேர்.

09. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.




✱ **பின்வரும் கணிதச் செய்கையைப் பயன்படுத்தி 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**


$$\begin{array}{r} x\,y\,z \\ +\,x\,y\,z \\ \hline 9\,1\,8 \end{array}$$ ஆயின்,

10. X x Z இன் பெறுமானம் யாது?
1) 45 2) 36 3) 30 4) 20

11. x + y + z இன் பெறுமானம் யாது?
1) 16 2) 18 3) 20 4) 24

12. 35 அடி ஆழமான கிணறொன்றில் தவறுதலாக தவளை ஒன்று விழுந்துவிட்டது. அது கிணற்றைவிட்டு வெளியே வருவதற்கு தினமும் 5 அடி மேலே ஏறினால், ஓர் அடி கீழே சறுக்கும். எனவே, தவளை எத்தனையாவது நாள் கிணற்றை விட்டு வெளியேறும்?
1) 7ஆம் நாள். 2) 8ஆம் நாள். 3) 9ஆம் நாள். 4) 10ஆம் நாள்.

✱ தரப்பட்டுள்ள நிறுத்தல்களை அவதானித்து 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.





13. ஆகியவற்றின் மொத்தநிறை யாது?
1) 2kg 800g 2) 1kg 150g 3) 1kg 350g 4) 1kg 800g

14. இதன்படி இரு தோடம்பழங்களின் நிறை யாது?
1) 500g 2) 475g 3) 400g 4) 350g

15. a = 5, b = 3, c = 1, d = 6 இதன்படி bxd = a + b + c + ? + ? வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள் யாவை?
1) b, d 2) b, a 3) d, a 4) d, c

16. ராஜாவின் சட்டைப்பையில் மூன்றுவகையான நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தப்பெறுமதி 28 ரூபா ஆகும். அந்நாணயங்கள் எவை?
1) ரூபா 5 நாணயங்கள் - 4, ரூபா 2 நாணயங்கள் - 3, ஒரு ரூபா நாணயங்கள் 3.
2) ரூபா 5 நாணயங்கள் - 5, ரூபா 2 நாணயங்கள் - 1, ஒரு ரூபா நாணயங்கள் 2.
3) ரூபா 5 நாணயங்கள் - 3, ரூபா 2 நாணயங்கள் - 5, ஒரு ரூபா நாணயங்கள் 2.
4) ரூபா 5 நாணயங்கள் - 4, ரூபா 2 நாணயங்கள் - 2, ஒரு ரூபா நாணயங்கள் 4.

17. மரக்கறி, கத்தரிக்காய் ஆகிய இரண்டுக்கும் இடையேயான தொடர்பை வெளிப்படுத்தும் சரியான உரு,




18. ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் 5km மாறா வேகத்தில் நடந்துசெல்வாராயின், 5பேர் ஒரு மணித்தியாலத்தில் அதே வேகத்தில் எத்தனை கிலோமீற்றர் நடந்து செல்வார்கள்?
1) 25 km 2) 20 km 3) 15 km 4) 5 km

19. 8 வருடங்களிற்கு முன்னர் நிரோவின் வயது 3 ஆகும். இப்பொழுது தந்தையின் வயது நிரோவின் வயதைப்போல் நான்கு மடங்காகும். தற்போது தந்தையின் வயது யாது?
1) 20 வயது. 2) 38 வயது. 3) 44 வயது. 4) 48 வயது.


20. எனக்கு மூன்று நண்பர்கள் உள்ளனர். இவ்வருடம் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது பிறந்தநாளிற்காக வாழ்த்துமடல்களைப் பரிமாறிக்கொண்டோம். எனின், இவ்வருடம் எம்மால் பரிமாறப்பட்ட வாழ்த்துமடல்கள் எத்தனை?
1) 9 2) 12 3) 16 4) 18

21. இரு எண்களின் கூட்டுத்தொகை 13 ஆகும். அவ்விரு எண்களையும் பெருக்கும் போது 42 பெறப்பட்டது எனில்; அவ்விரு எண்களும் எவை?
1) 5 , 8 2) 4, 9 3) 6, 7 4) 3, 10

22. 8 மாபிள்கள் கொடுத்து ஒரு சிறிய பந்து வாங்கலாம். ஒரு பொம்மை வாங்குவதற்கு 5 சிறிய பந்துகள் கொடுக்கவேண்டும். எனின், மூன்று பொம்மைகள் வாங்கக் கொடுக்கவேண்டிய மாபிள்கள் எத்தனை?
1) 120 மாபிள்கள். 2) 80 மாபிள்கள்.
3) 40 மாபிள்கள். 4) 35 மாபிள்கள்.

23. மதனிடம் 74 ரூபா உள்ளது. ரோசியிடம் 58 ரூபா உள்ளது. இவர்கள் இருவரும் சமனாகப் பணம் வைத்திருக்க வேண்டுமாயின், மதன் ரோசிக்கு எத்தனை ரூபா கொடுக்கவேண்டும்?
1) ரூபா 16. 2) ரூபா 12. 3) ரூபா 10. 4) ரூபா 8.

24. நண்பகல் ஒன்றைக் காட்டும் வகையில் வரையப்பட்டுள்ள உரு எது?




25. நான் காலை 8 மணியளவில் காரியாலயம் நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எனது நிழல் என்பின்னால் விழுந்தது. எனின், காரியாலயம் அமைந்துள்ள திசை யாது?
1) வடக்கு. 2) கிழக்கு. 3) தெற்கு. 4) மேற்கு.

26. அட்டைகளில் சில உருக்கள் வரைந்து முகம் பார்க்கும் கண்ணாடியில் காட்டப்பட்டது. இதில் உருவில் மாற்றம் எதுவும் தென்படாத அட்டையின் கீழ்க் கோடிடுக.

1) → ⟷ → 2) → → → 3) ← ← ← 4) ← ← →

27. ''எல்லா மாணவர்களும் ஒழுக்கமுடையவர்'' இக்கூற்றிலிருந்து விமல் ஒரு மாணவன் எனில், விமல் தொடர்பாக எடுக்கக்கூடிய சரியான முறை,
1) விமல் நன்றாகக் கற்கக்கூடியவன்.
2) விமல் திறமைசாலி.
3) விமல் ஒழுக்கமானவன்.
4) விமல் ஒழுக்கமற்றவன்.

28. ஆகாயத்தில் சென்றுகொண்டிருந்த விமானம் திடீரென அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இதற்குக் காரணமாக அமையக்கூடிய சரியான கூற்று,
1) எரிபொருள் தீர்ந்து விட்டமை.
2) பயணி அவசரமாகத் தரையிறங்கவேண்டியிருந்தமை.
3) இயந்திரக்கோளாறு காரணமாக.
4) எல்லோரும் உணவருந்துவதற்காக.

(மிகுதி வினாக்கள் 14 ஆம் பக்கம்)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இந்த வாரம்

**நவம்பர் 06**




இன்று உலகெங்கும் பிரபலமாக விளையாடப்படுகின்ற கூடைப்பந்தாட்டத்தை வடிவமைத்தவர் கனடாவைச் சேர்ந்த ஜேம்ஸ் நைஸ்மித். இவர் 1861ஆம் ஆண்டு நவம்பர் 06இல் பிறந்தார்.

**நவம்பர் 07**




ஒளி தொடர்பாகப் பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்தவரும், பௌதீகத் துறையில் நோபல் பரிசினைப் பெற்றவருமான இந்தியாவைச் சேர்ந்த சி.வி.ராமன் 1888ஆம் ஆண்டு நவம்பர் 7இல் பிறந்தார்.

**நவம்பர் 08**




அமெரிக்க ஜனாதிபதியாக இப்போது இருக்கும் ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷின் தந்தையான (சீனியர்) ஜோர்ஜ் புஷ் 1988ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதிதான் ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்டார்.

**நவம்பர் 09**



ஜேர்மனி நாட்டை, கிழக்கு - மேற்கு எனப் பிரித்துக் கட்டப்பட்டிருந்த 'பேர்ளின் சுவர்' 1989ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி இடிக்கப்பட்டது.

**நவம்பர் 10**



இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல சிற்பியான ஜேக்கப் எப்ஸ்டீன், 1880ஆம் ஆண்டு இதே நாளில்தான் பிறந்தார்.

**நவம்பர் 11**


முதலாம் உலகப் போர் நினைவுச் சின்னங்களில் ஒன்று

1918ஆம் ஆண்டு முதலாம் உலகப் போர் நிறுத்தப்பட்டது. அன்றிலிருந்து நவம்பர் 11ஆம் திகதி 'போர் நிறுத்த தினமாக' அனுஷ்டிக்கப்படுகின்றது.

**நவம்பர் 12**

புகழ்பெற்ற எழுத்தாளரான 'பரோனஸ் ஆர்க்ஸி' என்பவர் 12ஆம் திகதி 1947ஆம் ஆண்டு இறந்தார்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டியவை

★ உன் கடமையைச் செய்ய எப்போதும் துணிந்திரு. இதுவே வீரத்தின் உச்சநிலை.

★ நீ பேசுவதையெல்லாம் சிந்தித்துப்பார் - ஆனால் சிந்திப்பதையெல்லாம் பேசிவிடாதே.

★ நீ குற்றம் செய்யும்போது ஆண்டவன் உன்னைப் பார்க்கிறான், தண்டனை பெறும்போது நீ அவனைப் பார்க்கிறாய்.

★ மனம் நம்பிக்கையை இழப்பது - மரம் வேரை இழப்பது போன்றது.

★ பிறருடைய துன்பங்களை நினைத்துப் பாருங்கள். அது நம்முடைய துன்பங்களைச் சகித்துக் கொள்ள உதவும் முதற் பாடமாகும்.

★ பணம் பேச ஆரம்பிக்கும்போது - உண்மை ஊமையாகிவிடும்.

★ உலகத்தை நம்பவேண்டாம் - அது சொன்னதையெல்லாம் தந்ததில்லை.

★ ஒருபோதும் வறுமையைப் பற்றிச் சிந்திக்காதீர்கள், எப்போதும் வளமைபற்றியே சிந்தியுங்கள்.

ஜெ.யூட்டனிஸ்ரன், தரம் 10C, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## கவனிக்க 7 விடயங்கள்

கவனி உன் வார்த்தைகளை...!
கவனி உன் செயல்களை...!
கவனி உன் எண்ணங்களை...!
கவனி உன் நடத்தையை...!
கவனி உன் இதயத்தை...!
கவனி உன் அயலவர்களை...!
கவனி உன் வாழ்க்கையை...!

# கைகழுவுதல்; காலத்தின் அவசியம்!

**கே.எஸ்.சிவஞானராஜா**

கைகழுவுதல் தினம் இந்த வருடம் முதன்முறையாக உலகெங்கும் 15.10.2008 புதன்கிழமையன்று கொண்டாடப்பட்டது. குறிப்பாகப் பாடசாலைகளில் மாணவர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிறப்பாகவும், அர்த்த புஷ்டியுடனும் அனுஷ்டிக்கப்பட்டது. எப்போதோ ஆரம்பித்திருக்க வேண்டிய இத்தினம், காலங்கடந்தாவது கொண்டாடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

நாம் வாழும் அனைத்து இடங்களும் மிகவும் இலகுவாகவும், விரைவாகவும் மாசடையக்கூடிய வாய்ப்புகளே அதிகம் உள்ளன. மாசடையும் இடங்களில் எமது கரங்களையும், கால்களையும் பிரயோகிக்கின்றோம். வீட்டுப் பிராணிகளான நாய், பூனை, ஆடு, மாடு, கோழி, முயல், மைனா, தாரா ஆகியனவற்றை அளைந்து, அவற்றினுடைய எச்சங்களையும் அகற்றும் சந்தர்ப்பங்களில் தொற்றுக் கிருமிகள் கைகளில் வாசம் செய்கின்ற சுவாத்தியத்தை நாமாகவே ஏற்படுத்துகின்றோம். அத்தோடு எமது நகங்களையும் வெட்டாமல் அழகுக்காக வளர்ப்பதனால், கிருமிகள் நீடித்த ஆயுளோடு வாழ்வதற்குச் சந்தர்ப்பங்களையும் எமது வீட்டுக்குள்ளேயே ஏற்படுத்தி வருகின்றோம். இத்தகைய நிலைகளினால் ஒவ்வொரு வீட்டிலும் சுகநலம் என்பது தட்டுப்பாடாகவே இருக்கின்றது. அத்தோடு தினமும் இயற்கைக் கடன்களைக் கழித்த பின்னர், அனைவருமே கைகளைக் கழுவுகின்றோம்; ஆனால் சவர்க்காரம் போடுவதில்லை என்பதில் யாவருமே ஒற்றுமையுடையவர்களாகவே இருக்கின்றோம்.

*(தொடரும்)*

## கேள்விக்கு என்ன பதில்? - 9

**அனுப்பியவர்: க.ராகுலன்**
**8E, யாழ்.இந்துக் கல்லூரி.**



ஓர் எண்ணை
10ஆல் வகுத்தால் மீதி 9 ஆகவும்
9ஆல் வகுத்தால் மீதி 8 ஆகவும்
8ஆல் வகுத்தால் மீதி 7 ஆகவும்
7ஆல் வகுத்தால் மீதி 6 ஆகவும்
6ஆல் வகுத்தால் மீதி 5 ஆகவும்
5ஆல் வகுத்தால் மீதி 4 ஆகவும்
4ஆல் வகுத்தால் மீதி 3 ஆகவும்
3ஆல் வகுத்தால் மீதி 2 ஆகவும்
2ஆல் வகுத்தால் மீதி 1 ஆகவும்
இருக்கும் அந்த விநோத எண் என்ன?

*(சரியான விடைகளை 15.11.2008 இற்கு முன்பாக இளவல்கள் வட்ட படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்)*

## கேள்விக்கு என்ன பதில்? 08இன் சரியான விடை

100 தொழிலாளர்களும் உற்பத்தி செய்த பந்துப் பொதிகளை, அவரவரின் குறியீட்டு எண்ணின் எண்ணிக்கைக்கு ஏற்ப பெறவேண்டும். உதாரணமாக முதலாவது குறியீட்டு எண்ணை உடைய தொழிலாளியிடம் ஒரு பொதியையும், 25ஆவது குறியீட்டு எண்ணை உடைய தொழிலாளியிடம் 25 பொதிகளையும் பெறவேண்டும். இவ்வாறு 100 தொழிலாளிகளிடமும் அவரவர் குறியீட்டுக்கு எண்ணுக்கேற்ப பொதிகளைப் பெற்று ஒரே தடவையில் தராசில் இட்டு எடை பார்க்கவேண்டும். அதன்போது எத்தனை பந்துகளின் நிறை குறைவாகக் காணப்படுகின்றதோ அந்தக் குறியீட்டு எண்ணினைக் கொண்டவரே 9 பந்துகளைப் பொதிசெய்யும் தொழிலாளி ஆவார்.
உ+ம்: தராசில் 40 பந்துகளின் நிறை குறைவாக இருந்தால், 40 பொதிகளை வழங்கிய 40ஆவது குறியீட்டு எண்ணை உடையவரே தவறு செய்யும் தொழிலாளி என இனங்காணலாம்.

*சரியான விடை எழுதிய வாசகர்கள்:*
1) எம்.யோன் பிரியந்த், 11E, சென் ஜோன்ஸ் கல்லூரி.
2) தி.ரஜிந்தன், 10/1, சிவன் வீதி, திருநெல்வேலி.

## இளவல்களே!

*கேள்விக்கு என்ன பதில்? - 09 இலிருந்து வெற்றியீட்டும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன. பரிசு விவரம்:-*
*முதலாம் பரிசு - ரூபாய் 250 பெறுமதியான நூல்கள்.*
*இரண்டாம் பரிசு - ரூபாய் 150 பெறுமதியான நூல்கள்.*
*மூன்றாம் பரிசு - ரூபாய் 100 பெறுமதியான நூல்கள்.*

## பொன்மொழிகளில் பெண்கள்

1. *அழகான பெண் ஓர் இரத்தினம். குணமான பெண் ஒரு பொக்கிஷம்.* (நெப்போலியன்)
2. *அடக்கம், உண்மை, கற்பு இம்மூன்றும் பெண்களைப் பாதுகாக்கும் தேவதைகள்.* (ஹால்டன்)
3. *கணவனையே கண்கண்ட தெய்வமாக வணங்குபவள் பெய் என்றால் பெய்யும் மழை.* (வள்ளுவர்)
4. *ஒழுக்கமுள்ள பெண் அவளுடைய கணவனுக்கு, அரசன் அணியும் மணிமுடி போன்றவள்.* (பைபிள்)
5. *பெண்ணின் கற்பு கண்ணாடிப்பாத்திரம் போன்றது.* (காண்டேகர்)
6. *மலருக்கு மணம் போல் பெண்ணுக்கு கூச்சம்.* (கிரிகிரி)
7. *ஒரு பெண் கூறும் "இல்லை", "ஆம்" என்ற சொற்களின் ஊடே ஒரு ஊசி கூட புகமுடியாது.* (ஜெபர்வன்ரஸ்)
8. *ஒரு பெண் தாழ்ந்த குரலில் பேசினால் அவள் எதையோ அடைய விரும்புகிறாள் என்று பொருள். உரத்த குரலில் பேசினால் அவள் அதை அடையவில்லை என்று பொருள்.* (பொட்டோமாக் நியூஸ்)

எம்.எஸ்.நிதி, கட்டுடை, மானிப்பாய்.

## கவிதை புனைவோம்

### தோழியே!

இதயச் சுமைகளை
இதமாய் போக்கிட
இனிய தோழி நீ வேண்டும்!

கண்கள் கலங்கும் நேரம்
கவலை போக்கிட
கனிவான தோழி நீ வேண்டும்!

சின்னச் சண்டையிட்டு
சிரித்து மகிழ்ந்திட
சினேகிதியே நீ வேண்டும்!

நட்புக்கு இலக்கணமாய்
நாமிருவரும் விளங்கிட
நல்ல தோழியே நீ வேண்டும்!

என்.கிருஷாந்தினி, சிறுப்பிட்டி.

## நாடும் நடப்பும்

**ஆசிரியர்:** குமார்! நீ வலது கையால் எழுதுவியா, இல்லை இடது கையால் எழுதுவியா?
**குமார்:** இரண்டாலும் இல்லை சேர். பேனையால.



E.இந்துஜா, கைதடி மேற்கு, கைதடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

29. வைத்தியசாலையில் நாம் அவதானிக்கமுடியாத அறிவித்தல்களில் ஒன்று,
1) கடிநாய் கவனம்.
2) அமைதியைப் போற்றுக.
3) புகைத்தல் தடை.
4) ஆயுதங்கள் கொண்டுசெல்லத் தடை.

**✱ 30ஆம், 31ஆம் வினாக்களில் இரு நிகழ்ச்சிகள் ஒழுங்கற்ற முறையில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கு முறைப்படி குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. A- இரை தேடி உண்டது.
B- மாலை கூடு திரும்பியது.
C- அதிகாலையானது.
D- சற்றுநேரம் மரத்தின்மீதிருந்து ஓய்வெடுத்தது.
E- கூட்டை விட்டுப் பறந்தது.

**1) D, E, C, A, B. 2) C, E, A, D, B.**
**3) C, E, D, A, B. 4) C, E, A, B, D.**

31. A- சதுரத்தை வரைந்தான்.
B- புள்ளிகளைக் குறித்தான்.
C- தேவையான பொருட்களை எடுத்தான்.
D- அடிமட்டத்தால் புள்ளிகளை இணைத்தான்.
E- பென்சிலைக் கூர்மையாக்கினான்.

**1) E, C, B, D, A. 2) C, E, B, A, D**
**3) C, E, A, B, D. 4) C, E, B, D, A.**

**✱ வேறுபட்ட கூட்டத்தின் கீழ்க் கோடிடுக.**

32. 1) பாடசாலை - ஆசிரியர் - கல்வி.
2) வைத்தியசாலை - வைத்தியர் - மருந்து.
3) நீதிமன்றம் - நீதிபதி - வழக்கு.
4) சந்தை - வியாபாரி - பொருள்.

33. 1) கரப்பந்தாட்டம் - விளையாட்டு - கிரிக்கெட்.
2) கத்தரிக்காய் - வெண்டிக்காய் - கரட்.
3) கார் - பஸ் - லொறி.
4) மஞ்சள் - நீலம் - சிவப்பு.

34. 'சத்தியம்' என்ற சொல்லைக்குறிக்கும் மிகப்பொருத்தமான குறியீடு,
1) ○○○□△ 2) ○○○○△
3) ○○●□△ 4) ○○○□○

**✱ தரப்பட்டுள்ள எழுத்துகளை அடிப்படையாகக்கொண்டு 35ஆம், 36ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| ங், க், ம், ஞ, ன, ல, தி, ச, க, கோ, ர, து, மி, கி |
|---|

35. பறவைகளில் ஒன்று - ..............................

36. கடலில் வாழ்வது - ..............................

**✱ பின்வரும் வரிகளை வாசித்து 37ஆம், 38ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக.**

அந்தி நேர ஆதவனைப் பார் - அவன்
தேய்ந்து தேய்ந்து போவதைப் பார்
செக்கச் சிவந்த வானத்தைப் பார் - அதை
சிறுமுகில் வந்து மறைப்பதைப் பார்.

37. 'அந்திநேரம்' என்பதிலிருந்து விளங்கிக்கொள்வது யாது?

..............................

38. சிறுமுகில் எதை மறைக்கின்றது? ..............................

**✱ 39ஆம், 40ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை எழுதுக.**

39. உருவமில்லை நிறமுமில்லை, உயிர் வாழ உதவிடுவேன். உக்கிரத்தால் அழித்திடு வேன். உலகினிலே உலாவிடுவேன். நான் யார்?

..............................

40. ஆழ்கடலில் நான் பிறப்பேன், அழகுத்தங்கை அணிகலனில் நான் இருப்பேன், காண்பவர் கண்களைப் பறிக்கும் ஒளியுடையேன் நான் யார்?

..............................

ஆசிரியர் :- **திரு.து.திலீப்குமார்,**
விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு-13.
தொடர்புகளுக்கு : 071-4449447 (பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் மட்டும்)

## இப்பரீட்சைத் தொடருக்கு வினாத்தாள்களை வழங்கும் ஆசிரியர்களின் விபரம்

✱ திரு.V.அன்பழகன் - யாழ்
✱ திரு.T.மன்மதகாந்தன் - கொழும்பு
✱ திரு.ULM.சாஜித் - நிந்தவூர்
✱ திரு.P.அம்பிகைபாகன் - கொழும்பு
✱ திரு.A.சுதர்சன் - கண்டி
✱ திரு.S.கபிலன் - வவுனியா
✱ திரு.K.தவகுலரெட்ணம் - கொழும்பு
✱ திரு.S.தீபன் - வவுனியா
✱ திரு.புன்னியாமீன் - கண்டி
✱ திரு.T.சுரேஸ்குமார் - கம்பளை
✱ திரு.SA.சந்திரபவன் - கொழும்பு
✱ திரு.S.தயாளலிங்கம் - திருமலை
✱ திரு.P.பத்மநேசன் - திருமலை
✱ திரு.MP.பிரதீப்குமார் - கொழும்பு
✱ திரு.W.சேனநாயக்கா - கொழும்பு

**மாணவர்களே! தொடர் பரீட்சைகளுக்குப் பயிற்சிபெறத் தயாராகுங்கள்!!!**
**"பயிற்சி உயர்ச்சி தரும்"**

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035


# வெளி வந்துவிட்டது !



தகவல் தொழில் நுட்ப ஆசிரியர்
சி.பிரணவனின் G.C.E O/L க்கான
**"ICT வினாவிடைகள்"**
அலகு ரீதியான வினாவிடைகளுடன்
மாதிரி வினாத்தாள், 2007 வினாத்தாள்
ஆகியன விடைகளுடன்

*கிடைக்கும் இடம் :*
*ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை,*
*கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,*
*மற்றும் Soft View நிறுவனத்தின்*
*12 ம் திகதி கணினிக் கருத்தரங்கில்*

விரைவில்
பொது தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்ப நூலின் 2ம் பதிப்பு



யாழ்.மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்
சிற்றுண்டிச்சாலைக் குத்தகைக்கான

# கேள்வி அறிவித்தல் - 2009

யாழ்.மாநகரசபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான சிற்றுண்டிச்சாலைக் கட்டடமும் தளபாடங்களும், சமையல் பாத்திரங்களும் 01.01.2009 முதல் 31.12.2009 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 200/- ஐயும் மீளளிக் கப்படக்கூடிய கேள்விப் பிணைப் பணமாக ரூபா 1000/- ஐயும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை மேற்படி சங்க அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும்.
3. வருடாந்தம் ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா 75000/- ஆகும்.
4. கேள்விப் படிவங்கள் 11.11.2008ஆம் திகதி செவ்வாய் பிற்பகல் 3.00 மணிவரை விநியோகிக்கப்பட்டு 14.11.2008ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
5. கிடைக்கப்பெறும் கேள்விகள் 14.11.2008ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.
6. மேலதிக விவரங்கள் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் இயங்கும் மேற்படி சங்க அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச.தனபாலசிங்கம்
செயலாளர்
04.11.2008

(சி/555210)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 05 |
| 06 | 10 |
| 1933 | 2008 |



## திருமதி குருசாமி சவுந்தரம்

எமதருமை அம்மாவே! பத்து மாதம் எம்மைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தெடுத்து நல்வழிகாட்டி
பார்புகழ எம்மை வாழ வைத்து உன் கடமை
முடிந்ததென்று எங்கள் குலதெய்வமாம் பத்திரகாளியிடம்
நீங்கள் சென்று விட்டீர்களோ அம்மா...
அம்மம்மா என்ற சொல்லுக்கு நாம்
அநாதைகள் ஆகிவிட்டோம் - உங்கள்
நினைவுகளை எம் நெஞ்சில் சுமந்தபடி வாழ்ந்திடுவோம்
நம் வாழ் நாள்களில் அம்மம்மா ....!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம் தினம்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதங்கள் ஊடாக அனுதாபங்களை எம்மோடு பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நுணாவில் வீதி,*
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.* (79656)

*உங்கள் பிரிவால் வாடும்:*
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போரைத் தடுத்துநிறுத்துமாறு வலியுறுத்தி 3ஆம் கட்டப் போரில் குதிக்கும் விடுதலைச் சிறுத்தைகள்

## இன்று மகளிர் சார்பில் உண்ணாவிரதம்



சென்னை, நவ.6

இலங்கையில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போரைத் தடுத்து நிறுத்துமாறு இந்திய அரசை வலியுறுத்தி 3 ஆம் கட்ட போராட்டம் நடத்தப்படும் என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.

அதன்முதற்படியாக இன்று 6ஆம் திகதி மகளிர் விடுதலை இயக்கத்தின் முன்முயற்சியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

மேலும் இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் அப்பாவி ஈழத் தமிழர்கள் சிங்கள இனவெறிக் கும்பலின் - - முள்ளம் பன்றிகளின் பயங்கரவாதத்திற்கு ஆளாகி அழிந்து வருகிறார்கள். தமிழினம் திட்டமிட்ட இனப்படுகொலைக்கு இலக்காகி சின்னாபின்னமாகச் சிதைந்து வருகிறது. இந்நிலையில் மனிதநேய அடிப்படையிலாவது, இந்த இனப்படுகொலையைக் கண்டித்து குரலெழுப்பத்தான் தற்போது தமிழகமே ஓயாத அலையாகக் கொந்தளித்து எழுந்துள்ளது.

'இந்திய அரசே போரை நிறுத்து' என்னும் ஒற்றைக் கோரிக்கையை மட்டுமே முன்னிறுத்திக் குரலெழுப்பி வருகிறது. எனினும் இந்திய அரசு வழக்கம்போல, தமிழகத்துக் குரலைப் பொருட்படுத்தாமல் மெத்தனம் காட்டி வருகிறது.

இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ டில்லிக்கு வந்தும், மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழகத்துக்கு வந்தும் பேச்சுகள் நடந்தன என்றாலும், ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் போரை நிறுத்துவதற்கான அடையாளங்களே தெரியவில்லை. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை ஒரு பொருட்டாகவே இந்திய அரசு மதிக்கவில்லை. இன்றுவரை இந்திய அரசின் போக்கு தமிழினத்திற்கு எதிராகவே அமைந்துள்ளது. இந்திய அரசு போரை நடத்துவதற்காக அல்ல; போரை நிறுத்துவதற்காகத் தலையிட வேண்டுமென அழுத்தமாகவே தமிழகம் வற்புறுத்துகிறது.

இதை வலியுறுத்தி ரயில் மறியல் போராட்டம் நடத்தினோம். மீண்டும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் தொடர் போராட்டங்களில் ஈடுபடுவதென மாநில செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று 6ஆம் திகதி மகளிர் விடுதலை இயக்கத்தின் முன்முயற்சியில் உண்ணா

### இந்தியச் செய்திகள்

விரதப் போராட்டமும், 12ஆம் திகதி தொழிலாளர் விடுதலை முன்னணியின் தொடர் முழக்கப் போராட்டமும், 18ஆம் திகதி முற்போக்கு மாணவர் கழகத்தின் பேரணி மற்றும் பொதுக்கூட்டமும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் 'இந்திய அரசே போரை நிறுத்து' என்ற ஒற்றை முழக்கத்தை வலியுறுத்தியே நடைபெறுகிறது - என்றுள்ளது.

# இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி விஜய் ரசிகர்கள் பிரதமருக்கு 30 ஆயிரம் தந்தி



சென்னை, நவ. 6

இலங்கைத் தமிழர்கள் மீது மூர்க்கத்தனமாக சிங்கள அரசு நடத்திவரும் இராணுவத் தாக்குதலை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் - என்று வலியுறுத்தி நடிகர் விஜயின் ரசிகர்கள் மன்மோகன் சிங்குக்கு 30 ஆயிரம் தந்திகள் அனுப்பியுள்ளனர்.

நடிகர் சங்கம் நட்த்திய உண்ணாவிரதத்தில் நடிகர் விஜய், எனது ரசிகர்கள் மற்றும் தமிழ் உணர்வு உள்ள அனைவரும் பிரதமருக்கு ஒரு கோடி தந்தி அனுப்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதையேற்று விஜய் ரசிகர்கள் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு இதுவரை 30 ஆயிரம் தந்திகள் அனுப்பியுள்ளனர். தொடர்ந்து தந்திகள் குவிந்த வண்ணம் உள்ளன என்று விஜய் ரசிகர் மன்றப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். அதை விட விஜய் ரசிகர்கள் அதிக அளவில் ஆர்வமுடன் தந்தி அனுப்புகிறார்கள். விரைவில் ஒரு கோடி தந்தி அனுப்பி விடுவோம் - என்று விஜய் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவர் கூறினார்.

# ஈழத் தமிழருக்காக கமலின் தியாகம் பிறந்தநாள் கொண்டாட்டம் ரத்து!



சென்னை, நவ.6

ஈழத்தில் பற்றி எரிந்துகொண்டிருக்கும் போரினால் தமிழ் உறவுகள் உயிரிழந்து வரும் வேளையில், தன்னுடைய பிறந்த நாளை இந்த ஆண்டு கொண்டாடுவதில்லை என்று நடிகர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

நவம்பர் 7ஆம் திகதியை என் பிறந்தநாளாகக் கொண்டாடி மகிழ ஆவலாகவுள்ள என் இயக்கத் தோழர்களுக்கும், ரசிகர்களுக்கும் ஒரு வேண்டுகோள்.

ஈழத்தில் நிகழ்ந்து வரும் போரினால் பலர் உயிரிழந்தும், பலர் பிறந்த நாட்டையே இழந்தும் தவிக்கின்ற இவ்வேளையில், தனி ஒரு மனிதனின் பிறப்பு கொண்டாடப்படும் தகுதியை இழக்கிறது.

10 ஆயிரம் ஆண்டுகளே நிரம்பப் பெற்ற நமது மனித கலாசாரம் இன்னும் முழுமை பெறாத நிர்மாணப் பணி. அதற்குப் பேருதாரணமே உலகெங்கிலும் நிகழும் போர்கள்தாம்.

மத, ஜாதி, இன, மொழி, நிற வேறுபாடுகளைக் கூறி நம் இனத்தையே கூறுபோட்டு விற்கும் வியாபாரம் கலந்த அரசியலுடன் எனக்கு இருந்து வந்த கருத்து வேறுபாடு இப்போது வேரூன்றி நிலைத்து விட்டது.

அத்தகைய வியாபார அரசியல் நடத்தியதால் நிகழ்ந்த அவலம்தான் ஈழப்போரும் கூட. இலங்கை நமது அண்டை வீடு என்ற சமீபம் போக, ஈழப்போர் நம் தற்கால தமிழ் சரித்திரம் என்ற நெருக்கமும் என்னை எந்தக் கொண்டாட்டத்திலும் மனம் லயிக்க முடியாமல் தடுக்கிறது.

இதை ஓர் அரசியல் விமர்சனமாக நான் சொல்லவில்லை. மனிதனே மனிதனைக் கொல்லும் இந்தப் போர் இந்த நவீன யுகத்தின் ஊடகங்களால் நம் காது கேட்க, கண்ணுக்கெட்டும் தூரத்தில் நடக்கிறது.

இதன் முடிவு என்னவாக இருக்கும் என யூகிக்கும் அரசியல் சாதுரியம் எனக்கில்லை. நான் நிஜமாகவே சாதாரணன். மனித சோகங்கள் என்னை வெகுவாகப் பாதிக்கின்றன.

இந்தச் சோகச் சூழலுக்கு முடிவு சொல்லும் ஞானமில்லாவிடினும், அடுத்த வீட்டில் அடுத்தடுத்து இழவுக் கூட்டங்கள் நடக்கும் இவ்வேளையில் நம் வீட்டில் குதூகலக் கொண்டாட்டங்கள் நடப்பது மனித நேயம் சார்ந்த செயலாக இராது.

வழக்கமாக நான் பிறந்ததைக் கொண்டாடும் இத்தினத்தை நான் போற்றும் மொழியை பேசிய ஒரே குற்றத்திற்காக மட்டுமே இறந்து கொண்டிருக்கும் சாமானியருக்கு அனுதாபம் தெரிவிக்கும் நாளாகச் செலவிடுங்கள். இறந்தவருக்கு இரங்கல் சொல்லும் நாளாகச் செலவிடுங்கள்.

நான் பிறந்ததற்கான பயன்களில் ஒன்று இதுவாகவும் இருப்பின் பெருமை கொள்வேன் - என்றார்.

# ஈழத் தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுடல்களை பிளந்து தெறிக்குதையா சிங்கள வெடிகுண்டு

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு



இராமேஸ்வரம், நவ. 06

இலங்கை இராணுவத்தின் தாக்குதல் அதிகரிப்பால் பிழைப்புக்கு வழியில்லாமல் இங்கு வந்தோம். ஈழத்தில் இராணுவத்தின் குண்டுகள் பிஞ்சுக் குழந்தைகள் கை கால்களை பிளக்கின்றன. அந்த அவலத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

- இவ்வாறு தமிழகம் வந்த இலங்கை அகதிகள் கண்ணீர் மல்க கூறினர்.

இலங்கை மன்னார் பகுதியைச் சேர்ந்த கென்னடி (வயது - 38), கலைச்செல்வன் (வயது - 34), கருணாகரன் (வயது - 27), பிரபா (வயது - 28), சத்தியராஜ் (வயது - 22) ஆகியோர் கடந்த திங்கட்கிழமை இரவு மன்னார் கடற்கரையிலிருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் அதிகாலை சேரான்கோட்டை கடற்கரையில் வந்திறங்கினர்.

அங்கிருந்து கோயில் பொலிஸ் நிலையம் வந்த அவர்களைப் பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் முகாமுக்கு அனுப்பிவைத்தனர்.

அகதிகள் கூறுகையில், ''இலங்கையில் இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்து விட்டதால் பிழைப்புக்கு வழியில்லை. இராணுவத்தின் குண்டுவீச்சால் குழந்தைகள் முதல் பெரியோர் வரை பரிதாபமாக உயிரிழக்கின்றனர். இதனால் இங்கு அகதிகளாக வந்துவிட்டோம். மன்னாரிலிருந்து எமது சொந்தப் படகில் இராமேஸ்வரம் வந்தோம். படகைச் சேரான்கோட்டை கடற்கரையில் நிறுத்தியுள்ளோம்'' - என்றனர்.

# ஈழத்தமிழருக்கு ஆதரவாகத் திரண்டது திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம்

சென்னை, நவ.6

இலங்கைத் தமிழர் படுகொலையை கண்டித்து தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம் சார்பில் நேற்று சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் கொலை வெறித் தாக்குதல் நடத்தி வருவதைக் கண்டித்து தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் போராட்டம் நடத்தி வருகின்றன.

முதலாம் கட்டமாக கடந்த மாதம் 19ஆம் திகதி இராமேஸ்வரத்தில் தமிழ் திரையுலகத்தின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் -

2ஆம் கட்டமாக தமிழக முதலமைச்சர் அறிவித்திருந்த மனிதச் சங்கிலிப் போராட்டமும்-

3ஆம் கட்டமாக கடந்த முதலாம் திகதி தென்னிந்திய நடிகர் சங்கம் நடத்திய உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றன.

இந்நிலையில் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம் (பெப்சி) சார்பில் நேற்று வடபழனி அருணாச்சலா வீதியில் உள்ள செந்தில் ஸ்டுடியோ அருகில் உள்ள மைதானத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

'பெப்சி' அமைப்பின் தலைவர் பெப்சி விஜயன் தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை காலை 8 மணிக்கு தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராம. நாராயணன் தொடக்கி வைத்தார்.

இந்த உண்ணாவிரதத்திற்காக 5 ஆயிரம் பேர் அமரும் வண்ணம் பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் விளம்பரப் பதாகைகள் பந்தலில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த உண்ணாவிரதத்தில் திரைப்பட தொழிலாளர் சம்மேளனத்தின் 24 பிரிவுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை

சென்னை, நவ.6

போர்நிறுத்தம் செய்யுமாறு இலங்கையிடம் மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். கருணாநிதி மத்திய அரசிடம் இத்னை வலியுறுத்த வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கரூரில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்று மட்டுமே மத்திய அரசு கூறிவருகிறது என்றும், போரை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கையிடம் மத்திய அரசு கூறவேண்டும் என்றும், இதனை தமிழக முதல்வர் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன் அழைப்பு விடுத்துள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பா.ம.க. பங்கேற்கும். மேலும் இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து சென்னையில் பா.ம.கவைச் சேர்ந்த இளைஞர்கள் தீப்பந்தம் ஏந்திப் போராட்டம் நடத்துவார்கள் என்றும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ராமதாஸ் தெரிவித்தார்.

# இலங்கையின் உண்மை நிலையை அறிய நல்லெண்ணக் குழுவை அனுப்பவேண்டும்

## ஆளுநரைச் சந்தித்து அன்பரசு கோரிக்கை

சென்னை, நவ.6

ஈழத் தமிழர் பிரச்சினையில் உண்மை நிலைவரத்தை அறிந்து கொள்ள நடுநிலையாளர் தலைமையில் ஒரு நல்லெண்ணக் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

- இவ்வாறு ஆளுநரிடம் காங்கிரஸ் பிரமுகரும், சமூக சிந்தனையாளர்கள் பேரவையின் தலைவருமான ரா.அன்பரசு நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

அன்பரசு, வன்னியர் சங்கத் தலைவர் ஏ.கே.நடராஜன், படையாச்சியார் பேரவைத் தலைவர் எஸ்.எஸ்.ஆர்.ராமதாஸ் உள்ளிட்டோர் சென்னை கிண்டியில் உள்ள ராஜ்பவனில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர்.

பின்னர் அன்பரசு செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை உடனடியாக வழங்க வேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது என்ற விவரம் உண்மையில் யாருக்குமே தெரியாது. அங்கு உண்மை நிலையை ஆராய நடுநிலையாளர் தலைமையில் ஒரு நல்லெண்ணக்குழுவை அனுப்ப வேண்டும். அந்தக் குழுவில் எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள், சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை இடம்பெறச் செய்ய வேண்டும்.

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசிய இயக்குநர்கள் சீமானையும், அமீரையும் பிணையில் விடுதலை செய்யும்போது, வன்னிய சமுதாயத் தலைவர் குருவை பிணையில் ஏன் விடுவிக்கக் கூடாது? - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்றி எரிகின்ற ஈழத் தமிழர் பிரச்சினையில் ரஜினியின் துணிச்சல் கருணாநிதிக்கு இல்லை

## ஜூனியர் விகடனுக்கு வழங்கிய பேட்டியில் ராமதாஸ்



இரத்த மழையில் - மரணப்படுக்கையில் - வாழ்வுக்காய சாவைத் தாங்கும் ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் நடிகர் ரஜினி காட்டிய துணிச்சல் கலைஞர் கருணாநிதியிடம் துளியும் இல்லை.

- இவ்வாறு பா.மக. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் விகடனுக்கு வழங்கிய பேட்டியில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு-

கே- ஈழத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதிக்கு ஆதரவாக இருந்த நீங்கள், திடீரென அவரைத் தாக்க ஆரம்பித்திருக்கிறீர்களே?

ப- ஈழத் தமிழர் பிரச்சினையில் இருக்கும் நியாயங்களை உரக்கச் சொன்னால், அதற்காகக் கோபப்படுகிறார் கருணாநிதி. இலங்கையில் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையை உடனே நிறுத்த வேண்டும் என்பதுதான் எல்லோருடைய கோரிக்கையும். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் அதைத்தான் தீர்மானமாக்கினர். ஆனால், இப்போது 'மத்திய அரசு வெளிநாட்டுப் பிரச்சினையில் ஓரளவுக்குத்தான் தலையிட முடியும்!' என்று போட்ட தீர்மானத்தை யடுத்து பின்வாங்குகிறார் கலைஞர் கருணாநிதி.

வெளிநாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிட முடியுமா?' என்று பத்து நாட்களுக்கு முன்பு செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'பங்களாதேஷ் எப்படிப் பிறந்தது? அதுவும் வெளிநாட்டு விவகாரம்தானே!' என்று பளிச்சென பதில் சொன்ன கலைஞர், இப்போது பின்வாங்குவது ஏன்? அவரைத் தடுக்கும் சக்தி எது? இலங்கையில் மதவாத இராணுவ அரசு நடந்து வருகிறது. ஓர் இனத்தையே ஒட்டுமொத்தமாக அழித்து விடும் முனைப்போடு போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி சென்னைக்கு வந்து கலைஞர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசுகிறார். அதன் பிறகு, தலைஞரின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் மாறத் தொடங்கிவிட்டன. 'இலங்கையில் பேச்சு மூலமாகத்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும்...' என்கிறார் பிரணாப். பேச்சு மூலம் சமாதானப்படுத்தி பெரும்பான்மையாக இருக்கும் சிங்களர்களையும் சிறுபான்மையாக இருக்கும் தமிழர்களையும் ஒன்றாக வாழ வைப்பது இயலாது. இது இந்திய அரசுக்கு நன்றாகவே தெரியும். 'உடனே, போரை நிறுத்துங்கள்!' என்று இந்தியா சொன்னால், நிச்சயம் இலங்கை அரசு பணிந்து நடக்கும். ஆனால், நம்முடைய அரசு அதற்குத் தயங்குகிறது.

அதே நேரம், 'புலிகள் ஆபத்தானவர்கள். அவர்களை அடக்கும் வேலைதான் நடைபெறுகிறது. தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர்!' என்று மஹிந்த ராஜபக்ஷவின் தம்பி பஸில் டில்லிக்கு ஒரு குழுவுடன் வந்து சொல்லிவிட்டுப் போகிறார். அவர்கள் சொல்வதை யாரும் நம்பவில்லை. இந்தியாவில் இருக்கும் அனைத்துக் கட்சி எம்.பிக்கள் அடங்கிய ஒரு குழு வன்னிக்காடுகளுக்குச் சென்று நிலைமையை நேரில் கண்டறிய வேண்டும். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இதையாவது கலைஞர் கருணாநிதி செய்தால், இதுவே ஈழத் தமிழர்களுக்கு அவர் செய்யும் பெரிய உதவியாக இருக்கும்!

கே- மத்திய அரசில் அங்கம் வகிக்கும் நீங்கள் அதனை வலியுறுத்தலாமே?

ப- இப்படித்தான் கலைஞரும் கேட்கிறார். அவரின் நோக்கம் எனக்குப் புரியும். 'எங்கள் எம்.பிக்கள் (தி.மு.க.) எல்லோரும் ராஜினாமாக் கடிதங்களை கொடுத்தார்கள், அதுபோல் நீங்கள் கொடுத்தீர்களா?' என்று கேட்கிறார். தி.மு.க. எம்.பிக்கள் என்றைக்கு ராஜினாமாக் கடிதங்களை மக்களவை, மாநிலங்களவை தலைவர்களிடம் கொடுக்கிறார்களோ, அன்றைக்கே அடுத்த நிமிடமே பா.ம.க. எம்.பிக்களும் ராஜினாமா செய்வார்கள்.

பிரச்சினையின் ஆரம்பத்தில் பிரதமருக்கு தந்தி அனுப்பச் சொன்னார். தி.மு.கவினரும் தந்திகளை அனுப்பினர். அதே சமயத்தில், நானும் தந்தி அனுப்பச் சொல்லி பொதுமக்களை கோரியிருந்தேன். நான் நம்முடைய பிரதமருக்கு தந்தி அனுப்பச் சொல்லவில்லை. ஐக்கிய நாடுகள் சபைக்கு தந்திகள் அனுப்பச் சொன்னேன். ஏன் தெரியுமா? இப்போது இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ செய்து கொண்டிருக்கும் இதே போன்ற இனப்படுகொலையை, 1983ஆம் வருடம் செர்பியா நாட்டில் மிலோஸெவிக் என்ற ஜனாதிபதி கொசோவா இன மக்களிடம் மேற்கொண்டார். இதற்காக மிலோஸெவிக்கை ஐ.நா. சபை கண்டித்ததோடு, அதன் 'க்ரைம் ட்ரிப் யூனல்' மூலம் அவரை குற்றவாளி என்றும் அறிவித்தது.

அதேபோல மஹிந்த ராஜபக்ஷவையும் அறிவிக்க வேண்டும் என்பது என் கோரிக்கை. மஹிந்த செய்யும் அட்டூழியங்கள் ஐ.நா. சபைக்குத் தெரியவேண்டும் என்பதால்தான், அதற்கு தந்தி அனுப்பச் சொன்னேன். ஆனால், கலைஞர் கருணாநிதி காகிதத்தில் கவிதை எழுதி காலம் கடத்துகிறார். இன்றுகூட, 'தேவையானால் தங்கள் இன்னுயிரையும் தருவோம்' என்று ஒரு கவிதையில் சொல்லியிருக்கிறார். ஈழத் தமிழனுக்குத் தேவை இன்னுயிர் அல்ல. அவனுடைய உயிரைப் பிழைக்க வைக்கும் அருமருந்துதான்!''

கே- வெளிநாட்டு விவகாரத்தில் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று இந்திய அரசு நடந்து கொள்ள முடியுமா?

ப- தமிழகத்தில் தமிழன் உணர்வால் ஒன்றுபட்டாலும் அரசியலால் பிரிந்து கிடக்கிறான். அவனால் நமக்கு எந்தப் பாதிப்பும் வராது என்ற தைரியத்தில்தான் மத்திய அரசு, இலங்கைப் பிரச்சினையில் அதிக அக்கறை காட்ட மறுக்கிறது. 87ஆம் வருடம் இந்திய - இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டதே... அப்போது இலங்கை, இந்தியாவுக்குள்ளா இருந்தது?

83ஆம் வருடம் ஒகஸ்ட் மாதம் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி 'இலங்கையில் இனப்படுகொலை நடந்து வருகிறது. அதை அனுமதிக்க முடியாது!' என்று நாடாளுமன்றத்திலேயே பேசினார். நாம் அவ்வளவு தூரம்கூட போகவேண்டியதில்லை. 'போரை நிறுத்துகிறீர்களா இல்லையா?' என்று இந்தியா கேட்டாலே, இலங்கை பணிந்துவிடும். உலகமெல்லாம் சமத்துவம் பேசுகின்ற சீனா, இலங்கையில் இருக்கும் சிறுபான்மைச் சமூகமான தமிழனைக் கொல்ல சிங்களர்களுக்கு ஆயுதம் கொடுக்கிறது.

இந்தியா கொடுக்கின்ற தைரியத்தில் மஹிந்த ராஜபக்ஷ, 'புலிகள் அழிவது உறுதி' என்று கூறுகிறார். ஆனால், புலிகளை யாராலும் வெல்ல முடியாது. அந்தப் புலிகள் வைத்துக் கொண்டிருக்கும் விமானத்துக்கு பயந்து மஹிந்த ராஜபக்ஷ பதுங்கு குழிக்குள் சென்று பதுங்கி உயிர் தப்பியிருக்கிறார்!

கே- எதிர்க்கட்சித் தலைவியான ஜெயலலிதா இலங்கைப் பிரச்சினையில் நடந்துகொள்வது பற்றி?

ப- கலைஞர் கருணாநிதி எடுத்த முடிவுகளை ஆதி முதல் அந்தம் வரை விமர்சனம் செய்வதில்தான் மும்முரம் காட்டுகிறார் ஜெயலலிதா. கலைஞரும் ஜெயலலிதாவின் அறிக்கைக்குப் பிறகுதான் வைகோ, கண்ணப்பன், சீமான், அமீர் ஆகியோரை கைது செய்தார். உண்மையிலேயே இலங்கைத் தமிழர்கள் மீது ஜெயலலிதாவுக்கு அக்கறை இருந்தால் -

கலைஞர் எடுக்கும் நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதை விட்டுவிட்டு, அவரை விட பன்மடங்கு அந்தப் பிரச்சினையில் தன் கட்சியினரைப் போராட வைத்து மத்திய அரசை நிர்ப்பந்தித்திருக்கலாம்! ஒரு பிரச்சினையை விமர்சனம் செய்வது வேறு; அதற்குத் தீர்வு சொல்வது வேறு. இதுவரை இலங்கைப் பிரச்சினையில் ஜெயலலிதா விமர்சனங்களை மட்டுமே வைத்திருக்கிறார்.

கே - இலங்கைப் பிரச்சினைக்காகத் திரையுலகமே திரண்டு போராடியதே?

ப- தங்களுக்குள் பின்னப்பட்ட அரசியல் வலைகளை அறுத்துக் கொண்டு, ஒட்டுமொத்தத் திரையுலகமும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தமையை மனமாரப் பாராட்டுகிறேன்! குறிப்பாக சென்னையில் நடைபெற்ற நடிகர் - நடிகைகள் கலந்து கொண்ட உண்ணாவிரதம் உணர்வுபூர்வமாக நடந்த ஒன்று. அதில் பல நடிகர்கள் ஆச்சரியமாகவும், அழுத்தமாகவும் தங்கள் எண்ணங்களைப் பதிவு செய்தார்கள்.

குறிப்பாக, நடிகர் ரஜினிகாந்த் உண்ணாவிரதப் பந்தலில் ஆற்றிய உரை பாராட்டத்தக்கது. அவர் துணிச்சலைக் கண்டு வியந்தேன். அவருடைய பேச்சு, ஈழத் தமிழர்கள் பட்ட வலிகளுக்கு ஒத்தடம் இடுவதாக இருந்தது. மொத்தத்தில் ஈழத் தமிழர் பிரச்சினையில் ரஜினி காட்டிய துணிச்சல் கலைஞர் கருணாநிதியிடம் இல்லை. - என்றார் ராமதாஸ்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவே இராஜினாமாத் தீர்மானம்

## எதிர்க்கட்சிகளுக்கு கருணாநிதி விளக்கம்

சென்னை, நவ.5

ஈழத் தமிழர் பிரச்சினையில் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவே பதவி விலக நேரிடும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம் - என்று முதல்வர் கருணாநிதி விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றும்போது மத்திய அரசின் அதிகார எல்லை முதல்வருக்குத் தெரியாதா?'' என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கேட்டுள்ளார். நன்றாகத் தெரியும். தெரிந்துதான் தீர்மானம் நிறைவேற்றினோம். இலங்கை தமிழர் பிரச்சினையில் நமது எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்தவே ராஜிநாமாச் செய்ய நேரிடும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பிறகு தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்தனர். அதன் பிறகுதான் இந்தளவுக்கு வேகமாக நமது தீர்மானங்களை எல்லாம் ஏற்கக் கூடிய அளவிற்கும், போர் நிறுத்தம் என்ற தீர்மானத்தைக்கூட வலியுறுத்திக் கூறும் அளவுக்கும் நிலைமை மாறியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் செயல்பாடுகள் திருப்தியை அளிக்கின்றன. தமிழர்கள் அவதிப்படுவதை உணர்கின்ற மத்திய அரசையும், தலைவர்களையும் நாம் பெற்றிருக்கிறோம். அவர்கள் நம் உணர்வை மதிக்கிறார்கள். முடிந்தளவுக்கு உதவி செய்கிறார்கள்.

''பல்வேறு அறிவிப்புகளுக்கு சொந்தம் கொண்டாடும் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மட்டும் பா.ம.கவை நோக்கி கையை நீட்டுவது ஏன்?'' என்று ராமதாஸ் கேட்டுள்ளார்.

ராமதாஸ் கேள்வி கேட்டதால்தான் நான் அவருக்குப் பதில் சொல்ல நேரிட்டதே தவிர, அவருக்கு நான் பதில் தருவதும், எனக்கு அவர் பதில் தருவதும் வேண்டாத வேலை என்பது தான் எனது அபிப்பிராயம்.

ஈழத் தமிழர்களுக்கு உதவவேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, இங்கே ஒருவருக்கொருவர் பதில் கூறிக்கொண்டிருப்பது அல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா நிதி திரட்டுவதையே மோசடி நாடகம், கபட நாடகம் என்கிறார். ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நிவாரணப் பொருள்கள் வழங்குவோம் என்பது மக்களை ஏமாற்றும் வேலை என்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் திரட்டப்படும் நிதி அப்பாவி மக்களுக்கு போய்ச் சேரும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்கிறார். தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நிவாரண உதவிகள் மரணப்படுக்கையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு போய்ச் சேருவது சந்தேகம் என்கிறார்.

இத்தனை குரல்களும் வேறுபட்டு, மாறுபட்டு ஒலிக்காமல் ஒன்றுபட்டு ஒலித்தால் மத்திய அரசு, இலங்கையில் போரை நிறுத்த முயற்சிக்கும். இல்லையேல் இலங்கைத் தமிழர்களின் 'தலைவிதி' இப்படித்தான் என்று கடந்த கால நிகழ்வுகளையும், இக்கால நிகழ்வுகளையும் எண்ணி ஏங்கி எதிர்கால விடியல் வருமா என்று கண்ணீர் விட வேண்டியதுதான்.

மயிலை மாங்கொல்லை பொதுக்கூட்டத்தில் நானும் (கருணாநிதி) நிதி அமைச்சர் அன்பழகனும் ''ஒன்று படுக தமிழர்களே'' என்று அழைப்பு விடுத்தோம்.

அதன் தொடர்ச்சியாக ஒக்டோபர் 14ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தி 6 தீர்மானங்களை நிறைவேற்றினோம். அதன் பிறகு திரைப்படக் கலைஞர்களின் பேரணி, உண்ணாவிரதம், வரலாறு காணாத மனிதச் சங்கிலி ஆகியவை நடந்தன.

இலங்கையில் போர் நிறுத்தம் என்ற ஒன்றைத் தவிர மற்ற அனைத்தையும் நிறைவேற்றும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது என்பதை விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன் - என்றுள்ளது.

# இந்தியத் தூதர் மூலம் ஈழத் தமிழருக்கு அனுப்பப்படும் பொருள்கள் புலிகளுக்குப் பயன்படும் என்று கூறுவதா?

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி காட்டம்

தமிழர்கள் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் தமிழக அரசின் மீது தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்க்க வேண்டும் - என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி.

இதுதொடர்பாகத் தாம் விடுத்துள்ள அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஈழத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாகி, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமின்றி காடுகள், வனாந்தரங்களில் உறையும் நிலைக்கு -பிறந்த மண்ணிலேயே அவதியுறும் ஈவிரக்கம் அற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் இன உணர்வோடும், மனிதநேயத்தோடும் உதவிட, நிதி, நிவாரணப் பொருள்களைத் திரட்டி அங்கே அனுப்பும் நிலை முயற்சி முதல்வர் கலைஞர் தலைமையில் உருவாகியுள்ளது.

இந்நிலையில், இப்பொருள்கள் புலிகளுக்கே பயன்படும் என்ற விதண்டாவாத விஷமப் பிரசாரம் ஒருபுறம், மறுபுறம் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகளைக் கூறி அறிக்கை விடும் அவசர, ஆத்திர அரசியல் அரைவேக்காடுகளின் செயற்பாடுகள். இவற்றுக்கெல்லாம் மண்டையில் அடிப்பதுபோல முதல்வர் கலைஞருக்கு அவர் கேட்டுக்கொண்டபடி, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெளிவாகக் கடிதம் எழுதியுள்ளார்.

உதவிப் பொருள்கள் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுரகத்திற்குக் கப்பலில் அனுப்பப்படும். பிறகு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலமும் ஐக்கிய நாடுகள் சபையின் பார்வையாளர்கள் மூலமும், பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு - மூன்று லட்சத்திற்குமேல் சொந்த நாட்டில் சோற்றுக்கும் வழியற்ற நிலையில் உள்ள மக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

உணவை ஓர் ஆயுதமாகக் கொண்டு, இனப்படுகொலை செய்யும் சிங்கள அரசின் திட்டத்தை செயல்பட விடாது தடுக்கும் ஒரு சிறந்த ஏற்பாடு இது அல்லவா?

போர் நிறுத்தம் - அமைதி திரும்புதல், [illegible] தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், கட்சி அரசியல் நடத்தாது, மனிதநேயத்தோடு அரசுடன் இப்பிரச்சினையில் ஒன்றுபட்டு அழுத்தம் கொடுப்போம் என்று நிற்க முனையாமல், கட்டிய வீட்டுக்குக் குறை கூறுவதுபோல அறிக்கை விடுவதால் என்ன உருப்படியான பலன் ஏற்படும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழர்கள் வழமைபோல் இதிலும் - தீயை அணைக்க வேண்டிய நேரத்தில், அதில் பெற்றோலை ஊற்றுவதுபோல் நடந்துகொள்ளலாமா?

இங்கே சிறு பிசிறுகூட இல்லாமல் ஒன்றுபட்ட ஐக்கிமாகக் குரல் எழும்பினால், அடுத்த நிமிடமே மத்திய அரசு, சிங்கள ராஜபக்ஷவுக்கு ஆணையிடாது இருக்குமா?

மனச்சாட்சியோடு எண்ணுங்கள்; நடந்து வரும் நல்லவைகளைப் பாராட்டாவிட்டாலும், குறுக்குச்சால் ஓட்டாமலாவது இருக்கக் கூடாதா?

இன்னமும் சிங்கள ஜனாதிபதியாகவே தன்னைக் காட்டிக்கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷ திங்கட்கிழமை கூட (3 ஆம் திகதி) ஒரு பேட்டியில்,

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைந்தால்தான் போர் நிறுத்தம் செய்யப்படும் என்று கூறியிருப்பதுதான் இந்த ஆண்டின் தலைசிறந்த (ஜோக்) நகைச்சுவை.

போர் என்று கூற மாட்டாராம்! இராணுவ நடவடிக்கையாம் அது! அது மற்றொரு வேடிக்கை! போர் நடைபெறுவதே சிங்கள அரசுக்கும், புலிகளுக்கும்தான் என்பது உலகறிந்த உண்மை!

அந்நிலையில், புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுச் சரண் அடைந்தால், அப்புறம் இவர் போர் நிறுத்தம் செய்வாராம்! என்ன வினோதமான அர்த்தமற்ற பேச்சு! அப்புறம் அங்கே ஏது போர் - அல்லது இராணுவ நடவடிக்கை?

கடல் வற்றிக் கருவாடு தின்னக் குடல்வற்றிக் காத்திருந்த கொக்கின் கதை போன்றதே இது என்பது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்குத் தெரியும்படிதானே வான்படை, கடற்படை, தரைப்படை என்ற முப்படைகளையும் கொண்டு கொழும்பிலே வந்து தாக்கிவிட்டு, வெற்றிகரமாக தம் பகுதிக்கு புலிகள் திரும்பும் அளவுக்கு வலிமை பெற்று போர் புரியும் நிலையில், எத்தனை காலதிற்கு இதோ, அதோ ஒழித்துவிட்டோம், நெருங்கிவிட்டோம் என்ற புருடாக்கள் பயன்படும்?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, நவ.6

தொலைக்காட்சி ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் ஊடகத்துறை அமைச்சரினால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்து நேற்று உயர்நீதிமன்றத்தில் நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனம், மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்க அமைப்பாளர் உவிந்த குருகுலசூரிய ஆகிய தரப்பினர் சார்பில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தொலைக்காட்சி நிறுவனங்கள் போன்ற ஊடக அமைப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் -

இது, பல்வேறு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாக ஏற்கனவே உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவுகளினால் பாதுகாக்கப்பட்ட கருத்து வெளியிடும் சுதந்திரத்தை - அரசமைப்பின் மூலம் உறுதியளிக்கப்பட்ட பிரதான அடிப்படை உரிமையை - மீறும் நடவடிக்கை எனவும் -

மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-சி)

# ஒரு புலி உறுப்பினரைக் கொல்ல அரசுக்கு 25 லட்சம் ரூபா செலவு

கொழும்பு, நவ.6

2004ஆம் ஆண்டு முதல் இன்றுவரை புலி உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்வதற்கு அரசு தலா 25 லட்சம் ரூபாவைச் செலவு செய்துள்ளது என்று ஐ.தே.க. எம்.பி லக்ஷ்மன் கிரியல்ல நேற்றுக் கூறினார்.

2004 முதல் இன்றுவரை யுத்தத்திற்கென 50 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். 2004 முதல் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் ஜனாதிபதியும் இராணுவத்தினரும் மாறுபட்ட தகவல்களை வெளியிடுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை கொழும்பிலும், வவுனியாவிலும் புலிகளின் விமானம் தாக்குதல் நடத்திய சந்தர்ப்பத்தில் அந்த விமானத்தை விரட்டிச் சென்று தாக்குவதற்காக 'மிக்' யுத்த விமானத்தை விமானப் படையினர் இயக்க முற்பட்டபோது அது இயங்கவில்லை என்றும் அது மேல்நோக்கி ஓர் அடியேனும் எழும்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

ஆகவே, தரமற்ற 'மிக்' விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கிரியல்ல மேலும் கூறினார்.(அ-சி)

# கருணா குழுப் பொறுப்பாளரும் மற்றொருவரும் சுட்டுக்கொலை!

## சித்தாண்டி முருகன் ஆலய உற்சவ வேளையில் சம்பவம்

மட்டக்களப்பு, நவ. 06

மட்டக்களப்பு, சித்தாண்டி முருகன் ஆலய முன்றிலில் வைத்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (கருணாகுழு) பிரதேசப் பொறுப்பாளர் உட்பட இருவர் நேற்று அதிகாலை 5 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கருணா குழுவின் குடும்பிமலை கோட்ட சித்தாண்டி பிரதேச பொறுப்பாளரான தங்கபாண்டியன் என்று அழைக்கப்படும் பத்மநாதன் பாலகிருஷ்ணன் (வயது - 26) என்பவரும் அவரது மெய்ப்பாதுகாவலரான சுடர் என்று அழைக்கப்படும் சின்னப்பிள்ளை யோகராசா (வயது - 22) என்பவருமே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சித்தாண்டி முருகன் ஆலயத்தின் இறுதி உற்சவ தினமான நேற்று, சனக்கூட்டத்தின் மத்தியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீதே இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து அங்கு கூடியிருந்த மக்கள் சிதறி ஓடினர் என்றும் அதனால் அங்கு பதற்றம் நிலவியது என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# பல்கலைக்கழக மாணவர்கள் இன்று விரிவுரைகளுக்குத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை வழமை போல் விரிவுரைகளுக்கு இன்று முதல் சமுகமளிக்குமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கடந்த வருடத் தலைவர் செல்லத்துரை புருஷோத்தமனின் மரணச் சம்பவம் மற்றும் பல்கலைக்கழகச் சூழலில் ஏற்பட்ட அசாதாரண சம்பவங்களை அடுத்து மாணவர்கள் கடந்த மூன்று நாள்களாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழக சூழலில் ஏற்பட்ட அசாதாரண சம்பவங்கள் காரணமாக கடந்த மூன்று நாள்களாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளினை புறக்கணித்து வந்துள்ளனர். இயல்புநிலை திரும்பாத போதிலும் மாணவர்களின் எதிர்கால நலன்கருதி தமது புறக்கணிப்பை கைவிட்டு விரிவுரைகளுக்குத் திரும்புமாறு அனைத்துப் பீட மாணவர் ஒன்றியங்கள் சார்பாக வேண்டிக் கொள்கிறோம். இன்று வியாழக்கிழமை முதல் வழமை போல் விரி வுரைகளுக்கு சமுகமளிக்கும்படி வேண்டிக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-1)

# இந்திய-ஆஸி. கடைசிப்போட்டி இன்று

நாக்பூர், நவ. 06

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது.

4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டும், டில்லியில் நடந்த 3ஆவது டெஸ்ட்டும் சமநிலையில் முடிந்தன. மொஹாலியில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா 320 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இரு அணிகளும் மோதும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூரில் இன்று ஆரம்பமாகிறது.

இந்த டெஸ்டை சமன் செய்தாலே இந்திய அணி தொடரை வெல்லும். அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை கண்டிப்பாக வென்றால்தான் தொடரைச் சமன் செய்ய முடியும். இதனால் அந்த அணி கூடுதல் நெருக்கடியில் உள்ளது.

கும்ளே ஓய்வு பெற்றதால் டோனி தலைமைப் பொறுப்பை வகிக்கிறார். அவரது தலைமையில் தான் மொஹாலி டெஸ்டில் வெற்றி கிடைத்தது.

## தவறிவிட்டது

110/13, சட்டநாதர் வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலச்சந்திரசர்மா சொர்ணலட்சுமி அம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (547613422V) 01.11.2008 சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் அச்சுவேலி மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சட்டநாதர் சிவன் கோவில் பின் வீதி)

# பலத்த பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உள்ள அமைச்சர்களினதும் எம்.பிக்களினதும் அறைகள் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டன.

எம்.பிக்களை இன்று ஏற்றிவரும் வாகனங்கள் அவர்களை நாடாளுமன்ற வளாகத்தில் இறக்கிவிட்டு நாடாளுமன்ற வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படும்.

இந்த வரவு - செலவுத்திட்ட சமர்ப்பிக்கப்படுவது தொடர்பான செய்திகளைத் திரட்டும் ஊடகவியலாளர்கள் அரச தகவல் திணைக்களத்தில் வைத்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் சோதனையிடப்பட்டு அங்கிருந்து நாடா ளுமன்றுக்கு விசேட பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்படுவர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி இந்த வரவு - செலவுத் திட்டத்தை நிரா கரித்து மாற்று வரவு - செலவுத் திட்ட யோசனை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த யோசனையை அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்குமாறு ரவி கருணாநாயக்க அரசிடம் அப்போது கோரிக்கையும் விடுத்தார்.(அ-சி)


## புறொயிலர் விற்பனையும் இடமாற்றமும்

இல.65, அரசடி வீதியில் இயங்கி வந்த வீனஸ் பாம் விற்பனைப் பகுதி தற்போது இல.20, அரசடி வீதியில் (தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்) இயங்கி வருகின்றது. புறொயிலர், கல்பேட் நியாயமான விலையில் விரும்பிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனைப் பகுதி.
இல.20, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

வீனஸ் பாம்
பலாலி வீதி, (நல்லூர் AGA Office முன்பாக) திருநெல்வேலி.



வசீகரத் தோற்றத்திற்கு
## சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை, தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடை தலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகரமுக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், கிளைவுபடுதல் போன்ற சரும நோய் களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
## 'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SANJEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA.
AYR PRO. NO: REG NO A/L 250


# அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராக் ஒபாமாவிற்கு 51 வீத வாக்குகள் கிடைத்துள்ள அதே வேளை, மக்கெய்னிற்கு 48 வீத வாக்குகள் கிடைத்துள்ளன.

ஒகாயோ, புளோரிடா, கலிபோர்னியா, நியூயோர்க் உட்பட முக்கிய மாநிலங்களில் ஒபாமா வெற்றி பெற்று முன்னிலையில் திகழ்ந்தார்.

கடந்த இரு தேர்தல்களிலும் குடியரசுக் கட்சியே இம் மாநிலங்களைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பெருந்திரளான மக்கள் மத்தியில் உரையாற்றிய ஒபாமா, "நீண்ட காலத்திற்குப் பின்னர் அமெரிக்காவில் மாற்றம் சாத்தியமாகியுள்ளது" என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் தீவிர அரசியல் வேறுபாடுகளைக் கைவிட்டு, தமக்கு வாக்களிக்காதவர்களுக்காகவும் தாம் பணியாற்றப் போகிறார் என ஒபாமா அறிவித்தார்.

### ஜனவரி 20 இல் பதவியேற்பு

பராக் ஒபாமா எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக் காவின் 44ஆவது ஜனாதிபதியாகப் பதவி யேற்பார்.

1961 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி பிறந்தவர் ஒபாமா. கொலம்பியா பல்கலைக்கழகத்திலும், ஹவார்ட் சட்டக் கல்லூரியிலும் பட்டங்களைப் பெற்ற இவர், 1997 இல் இலயானா மாநிலத்திலிருந்து சட்ட மன்றத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2004 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் தொடர்ந்திருந்தார். அதேநேரம் 1992 ஆம் ஆண்டு முதல் 2004 வரை சிக்காக்கோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார். 2004 இல் அமெரிக்க மேல்சபைத் தேர்தலில் 70 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார்.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனின் மனைவி கிளாரி கிளின்டனுடன் போட்டியிட்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் [illegible] வெற்றிபெற்றிருந்தார்.

ஒபாமாவின் தந்தை கென்யாவைச் சேர்ந்தவர். ஒபாமாவுக்கு மனைவி மற்றும் இரு பெண் குழந்தைகள் உள்ளனர்.(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## அருமைமுத்து செல்வராசா

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருமைமுத்து செல்வராசா நேற்று (05.11.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், அருமைமுத்து-செல்லமுத்துவின் அன்பு மகனும், கிறிஸ்ரீனம்மா, தர்மஷீலம்மா, யேசுதாசன், மரியமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்ரர், பீற்றர், சில்வெஸ்ரர், பவானி ஆகியோரின் மாமனாரும், நிஷாந்தன், ரொனிகபிரியேல், சந்தனு, அட்றியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.11.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு இல.17, முதலாம் ஆம் குறுக்கு பாஷையூரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17,முதலாம் குறுக்கு வீதி,
பாஷையூர்.

தகவல்:
ப.யேசுதாசன் (மகன்).

## திருமதி தேவராசா தங்கராணி



கலைநகர், அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா தங்கராணி 03.11.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாராயணபிள்ளை - அமரர் சிந்தாமணி (அம்மாச்சி) தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சவரிமுத்து தேவராசாவின் அன்பு மனைவியும் ஜெயசுதா (கனடா), சுஜிதா, சுயதாஸ் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், மன்னார்), ஜீவதாஸ், அஜிதா, டெனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்கினேஸ்வரன் (கனடா), சிவராசா, ஹம்சானந்தி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2008) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு. (79670)

தகவல்:
தேவராசா குடும்பத்தினர்.

# போரை நிறுத்தாமல் உதவிப் பயனில்லை தமிழகத்தில் சிவாஜிலிங்கம் விளக்கம்

சென்னை, நவ.6

''தமிழக அரசு கொடுக்கும் அரிசியை தமிழர்கள் சமைத்துச் சாப்பிடும் நிலைமை இலங்கையில் இல்லை. போரை நிறுத்தாமல் உதவினால் அது மக்களுக்கு வாய்க்கரிசியாகத்தான் போய்ச் சேரும்''

- இவ்வாறு சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவித்தார்.

தமிழகத்திலுள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் வக்கீல்கள் சார்பில் இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக்கோரி உண்ணா விரதப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சிறிகாந்தா எம்.பியும் கலந்துகொண்டார்.

அங்கு சிவாஜிலிங்கம் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள இன உணர்வு கண்டு இலங்கை அரசு பயப்பட ஆரம்பித்துவிட்டது. இந்திய சுதந்திரம் அடைந்த போது பாகிஸ்தானைப் பிரித்து போல் இலங்கையையும் பிரித்துக் கேட்டிருந்தால் தமிழர்களுக்கு இந்நிலை அங்கு ஏற்பட்டிருக்காது.

இதுவரை இலங்கை அரசு, தமிழர்கள் மீது 6,000 தொன் வெடிகுண்டுகளை வீசியுள்ளது. தமிழக அரசு கொடுக்கும் அரிசியை வைத்துச் சமைத்துச் சாப்பிடும் நிலை அங்கு இல்லை. போர் நடத்திக்கொண்டு தான் இந்த உதவி என்றால், அது மக்களுக்கு வாய்க்கரிசியாகத்தான் சென்றுசேரும்.

உலகத்தில் பல நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள போதும் இலங்கையில் அவ்வியக்கம் தடைசெய்யப்படவில்லை. விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட ஒரு போதும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். கடைசித் தமிழன் உள்ளவரை ஆயுதத்தை கீழே போடுவது என்பது நடக்காத ஒன்று. - என்றார். (அ)

## ஒபாமாவுக்கு மஹிந்த வாழ்த்து

கொழும்பு, நவ.6

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் குறித்தும் ஒபாமாவின் வெற்றி குறித்தும் தாம் மிக மகிழ்ச்சி அடைகிறார் என இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக்கிற்கு தொலைபேசி மூலம் இவ் வாழ்த்தினை ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என வும் கூறப்படுகின்றது.

## புனாவவில் நேற்று வெடிப்புச் சம்பவம்

கொழும்பு, நவ. 06

வவுனியா புனாவ பகுதியில் நேற்றுக் காலை வெடிப்புச்சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது என மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இரண்டு சிவிலியன்கள் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்த இருவரும் அநுராதபுர வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எரிபொருள் விற்பனை செய்யும் கடையிலேயே ,இந்தச் சம்பவம் இடம்பெற்று இருக்கின்றது. இருப்பினும் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதற்கான தடயங்கள் இருக்கின்ற போதும் இவை தொடர்பாக முழுமையான விவரங்கள் தெரியவரவில்லை என்றும் மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்தனர்.

புனாவ பிரதேசம், வவுனியாவில் இருந்து தெற்கு திசையில் 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இது மதவாச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## வவுணதீவில் தேடுதல்; 25 பேர் கைது

மட்டக்களப்பு, நவ. 06

மட்டக்களப்பு, வவுணதீவு, கன்னன்குடா பகுதியில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 25 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் அதிகாலை 5.30 மணிமுதல் காலை 9.30 மணிவரை இச் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதியில் வீடுவீடாகச் சென்று பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் சோதனைகளை நடத்தினர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (சி)

# தமிழ்க் கூட்டமைப்பைத் தவிர்த்து எட்டப்படும் எந்தத் தீர்வுத் திட்டமும் முழுமையடையாது!

## ஐ.தே.கட்சி எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, நவ. 06

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுக் கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் அழைக்கப்பட வேண்டும் என்று ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாது எட்டப்படும் அரசியல் தீர்வு முழுமையானதாக இருக்கும் என்று நம்ப முடியாது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்லவே இவற்றைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தின் நடவடிக்கை 90 வீதம் முழுமையடைந்துள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தமிழ் மக்கள். அந்த மக்களின் பிரதிநிதிகளின் பங்களிப்பு இல்லாமல் இடம் பெறும் இந்த சர்வகட்சி கூட்டத்தில் எட்டப்படும் தீர்வு எப்படி முழுமையானதாக இருக்கும்?

அரசுக்கு சார்பானவர்களைத் தவிர, வேறு எவரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியினர்கூட அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு எதிரானவர்கள்.

ஆகக் குறைந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாவது இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டும். அக்கட்சியின் கருத்துகள் உள்வாங்கப்பட வேண்டும்.

இந்த நிலையில், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் தீர்வு தயாரிப்பு நடவடிக்கை 90 வீதம் முடிவடைந்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவிப்பதை எப்படி ஏற்றுக் கொள்வது?

அங்கு சென்று இங்கு சென்று இறுதியில் எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்த அரசியல் தீர்வு யோசனையையே மஹிந்த ராஜபக்ஷ பின்பற்றப் போகிறார் - என்றார். (அ-சி)

## 20 ஆயிரம் குடும்பங்கள் தங்குமிடமின்றி வன்னியில் அவதி!

வவுனியா, நவ.6

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களில் 20 ஆயிரம் குடும்பங்களுக்கு தங்குவதற்கான வசதிகள் எதுவும் இல்லை - என அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக 20 ஆயிரம் தங்குமிட வசதிகள் உடனடியாக செய்துகொடுக்கப்பட வேண்டும் எனவும் இடம்பெயர்ந்த குடும்பங்களில் பெரும்பாலானவர்கள் போதிய தங்குமிட வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான தங்குமிட வசதிகளில் பெரும் குறைபாடுகள் உள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுக்குரிய தங்குமிட வசதிகளை அமைப்பதற்கான பொருள்களைப் பெறுவதற்கு தினமும் அங்குள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாடுகின்றனர். ஆனாலும், தற்காலிகக் கூடாரங்களை அமைப்பதற்கான உதவிகள் போதுமானவை அல்ல என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு 5 இலட்சம் பேர் தோற்ற விண்ணப்பம் டிசெம்பர் 8இல் ஆரம்பமாகின்றது

கொழும்பு, நவ. 06

எதிர்வரும் டிசம்பர் மாதம் 08 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு 5 இலட்சத்து 36 ஆயிரத்து 905 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது.

டிசம்பர் 08 ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சை அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை 4,733 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்குத் தோற்ற பழைய பாடத்திட்டத்தின் கீழ் 1,14,417 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 1,29,191 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் விண்ணப்பித்துள்ளனர் எனஅவர் மேலும் குறிப்பிட்டார்.

பழைய பாடத்திட்டத்துக்கான பரீட்சை 2,069 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2,92,010 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 1,287 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்துக்கான பரீட்சை 2,664 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. புதிய மற்றும் பழைய பரீட்சை நிலையங்களை ஒருங்கிணைப்பதற்கான 523 ஒருங்கிணைப்பு மத்திய நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (சி)

## இம்மாத இறுதியில் ரணில் இந்தியா விஜயம்

கொழும்பு, நவ.6

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதியில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் அழைப்பை ஏற்றே அவர் இந்தியாவுக்கு செல்கிறார் என்றும், இலங்கை இனப்பிரச்சினை குறித்த விடயத்தில் இந்திய அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவார் என்றும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளையும் அவர் சந்திப்பார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான தகவல் நேற்றுமாலை வெளியாகியது.

இது தொடர்பாக பயணிகள் சேவையை நடத்திவரும் 'எக்ஸ்போ' நிறுவன அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது - நேற்று மாலை கிடைத்த திடீர் உத்தரவை அடுத்தே இன்றைய சேவை நிறுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். (அ-1)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
#07, KANPOLLAI LANE, KODIKAMAM RD, NELLIYADI

நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளைநிறுவனத்தில் 06ம் 07ம் 8ம் திகதிகளில் பதிவுசெய்யும் மாணவர்களுக்கு விசேடகட்டணக்கழிவு வழங்கப்படுகின்றது.

9மணிமுதல் 02மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

10ம் திகதியிலிருந்து வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (சி)

### அதிரடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப்படையினர் மீதே தமது அணியினர் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். அதிலேயே விசேட அதிரடிப் படையினர் இந்த இழப்புக்களைச் சந்தித்தனர் என்று புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இத்தாக்குதலை நடத்திய ஜெயந்தன் படையணிப் போராளிகள் எவ்வித இழப்புகளும் இன்றி தளம் மீண்டனர் என்று புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இச்சமர் குறித்து படைத்தரப்பில் எவ்வித தகவலும் இச்செய்தி எழுதும்வரை நேற்றிரவு வெளியாகவில்லை. (சி)

### வன்னியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற விசேட மாநாட்டில் இது குறித்து ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் மக்களுக்கு விசேட முகாமை எங்கு அமைப்பது என்பது குறித்து நேற்று முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

வன்னியில் இருந்து வருபவர்களுக்கு தேவையான உணவு வழங்கும் பொறுப்பை அரச அதிபரும் சுகாதார நிலைமை பான பொறுப்பை டாக்டர் கேதீஸ்வரனும் மேற்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என இக் கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியவந்தது. (அ-1)

### வலி.வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியில் கூடியபோது இது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

முதலாவது கட்டமாக இதுவரை சுமார் 600 குடும்பங்கள் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து -

பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிகளில் மக்களை இரண்டாவது கட்டமாக மீளக்குடியமர்த்துவது குறித்து நேற்று விரிவாக குழு ஆராய்ந்தது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கு அப்பால் பாதுகாப்பு வேலியை பின்நகர்த்துவது குறித்து நேற்று ஆராயப்பட்ட போதும் இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

அது தொடர்பாக உயர் நீதிமன்றத்திடம் அறிக்கை சமர்ப்பித்து அனுமதி பெறுவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியவந்தது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.